# தொட்டனைத் தூறும் மணற்கேணி

# அதிபர் பொ. கனகசபாபதி

## சிறப்பிதழ்



ஓவியம்: கருணா

# எம் வரம்

**அதிபர் பொ. கனகசபாபதியின் 31வது நாள் நினைவு நிகழ்வில் அவரது குடும்பத்தினர் வெளியிட்ட 'தென்திசை அதிபருக்கு ஒரு அதிபரின் அஞ்சல்' என்ற நூலுக்கு அவரது பிள்ளைகள் எழுதிய முன்னுரை**

ஒருவர் வாழ்ந்த வாழ்க்கை என்பது அவர் சம்பாதிக்கும் பணத்தைப் பற்றியது அல்ல, அவர் எதை விட்டுச்செல்கிறார் என்பதுவே ஆகும்." இதை எங்கள் தந்தை பொன்னையா கனகசபாபதியை விட யாராலும் நன்கு அறிந்திருக்க முடியாது.

பல பரப்புகளினூடாக எங்கும் வியாபித்திருக்கும் அவருடைய 79 ஆண்டு கால வாழ்க்கையை இந்தப் பக்கங்களில் அடக்குதல் சாத்தியமானதல்ல.


எங்கள் அப்பா அவரைவிடப் பிரமாண்டமான வாழ்வை வாழ்ந்து நிறைவு செய்திருக்கின்றார். எங்கள் அப்பாவின் மகிழ்ச்சி, அன்பு போன்றவை அவர் மற்றவர்களுடன் பேசும் விதத்திலும் கேலி செய்து அவர்களது முகத்தில் புன்னகையைக் கொண்டு வரும் விதத்திலுமே பெரிதும் வெளிப்படுத்தப்பட்டன. ஒரு வகையில் இதுவே அவரது அடையாளமாகவும் இருந்தது.

ஒருமுறை எங்கள் உறவினர் ஒருவர் ஒரு குரங்கை வீட்டிற்கு எடுத்து வந்தார். அக் குரங்கு எம்மில் ஒருவரைக் கடித்துவிட்டது. மருத்துவரிடம் குரங்கினாற் கடிபட்டவரையும் குரங்கைக் கூட்டி வந்தவரையும் அழைத்துச் சென்றார் அப்பா. என்ன நடந்தது என்று மருத்துவர் கேட்டதற்கு அவர் கொடுத்த பதில் இதுதான், (குரங்கை அழைத்து வந்தவரைக் காட்டி) "இந்தக் குரங்கு ஒரு குரங்கைக் கூட்டி வந்தது. அந்தக் குரங்கு (கடி பட்டவரைக் காட்டி) இந்தக் குரங்கைக் கடித்துவிட்டது."

எப்பொழுதும் அப்பாவை பார்த்து நாங்கள் பல காரணங்களுக்காகப் பிரமித்திருக்கிறாம். அப்பா கல்லூரி அதிபராக இருந்த காலம். ஒருதடவை மறைந்த எம் இளைய சகோதரனுக்குக் கல்லூரியில் தண்டனை கொடுக்கும்படியாகிவிட்டது. செய்யாத குற்றத்திற்காக பல பிரம்படி. கல்லூரி முடிந்து வீடு வந்த அப்பா அன்று மாலையே எல்லோரையும் அப்பலோ சர்க்கஸ், சினிமா மற்றும் சுபாஸ் ஐஸ்கிரீம் எனக் கூட்டிச் சென்று மகிழ்வித்தார். இதற்கு அப்பா கூறிய காரணம், "கல்லூரில் அதிபராக என் கடமையைச் செய்தேன், வீட்டில் அப்பாவாகவும் என் கடமையைச் செய்ய வேண்டுமல்லவா."

கூரிய அறிவு, நகைச்சுவை உணர்வு, எல்லோரையும் குதூகலப்படுத்தி தன்வசம் ஆக்கும் அல்லது நண்பராக்கும் திறன், அளவுக்கு மீறிய கோபத்தையும் நகைச்சுவையுடன் காட்டும் பாங்கு ("மணி மணியாக வரும் என்று என் பிள்ளைகளுக்கு மணி மணி என்று பெயர் வைத்தேன், ஒன்றும் உருப்படாது போல் உள்ளது") என்பன அவரை

தொடர்தல் 83ம் பக்கம்



# பிரியாவிடை

இந்தப் பெரிய இடம் முழுதும்
உன் கால்கள்
என்றும் நடந்து திரிந்ததனைக் கண்டுள்ளேன்.

கல்லூரி வாசல்
வாசல் தொடர்ந்து வளைந்து செல்லும் பாதை
அதன்
ஒரு புறத்தில் பூச் செடிகள் (நீ நட்டவை)
மறு புறத்தில் வகுப்பறைகள் (நான் இருந்தவை)
அசோக மரம், பெரிய மணிவாழை,
இலையற்றுப் பூச் சொரியும் ஐப்பொமியா லியாறி

அவற்றைக் கடந்து சென்றால்
வரிசை என வரிசை என மாமரங்கள்
அவற்றிடையே
ஆடுகிற மென்காற்று

அந்தப் புறமாக அந்தப்புரம் இருக்கும்.
அதை அடுத்துக் கோயில், மேலும் வகுப்பறைகள்
திறந்த வெளி மேடை என ஒரு சுற்று நடை நடந்து
நீ திரும்பி வர
கூடி வரும் காலை வெய்யில்

இது கல்லூரி மட்டும் அல்ல
உன்னுடைய கூடு.

இதை விட்டு எங்கு போவாய்?

பொன்னை இது பொன் என்று
போற்றத் தெரியாதார்,
மின்மினிக்கும் வெள்ளிக்கும் பேதம் அறியாதார்
தென்னை மரத்தைக் குளிர் நிலவில் ஓலைகளைப்
பின்னி அது சுழற்றும் பேரழகை
இன்னும் இன்னும் உண்மைகளை
ஓயா உழைப்பை
உலகத்தில் நல்லவையே செய்ய எனும்
நாளும் நடப்பவரை
ஏன், உன்னையும்தான் இந்த உலகம் விரும்பாது

“உனை நீ அறி” என்று
ஓதத் தெரிந்தவர்க்கு
உன் ஆழம் தெரியவில்லை
பாசாங்கும் பொய்மையும் போலிப் பகட்டுகளும்
கோலோச்சும் காலம் இதுவன்றோ?

இங்கு உனக்கென்ன இடமுண்டு?

நிறுத்தி விடு உன் நடத்தல்களை
சென்று வா, உனக்கான உலகம்
வெளியே விரிந்து கிடக்கிறது.

**- சேரன்**

(1979இல் மகாஜனக் கல்லூரியை விட்டு அதிபர் கனகசபாபதி அவர்கள் விலக நேர்ந்தது. அப்போது எழுதப்பட்ட கவிதை. இந்தக் கவிதை அதிபருக்கான பிரியாவிடை நிகழ்வொன்றின் போது வாசிக்கப் பட்டது)

எல்லோருடனும் நெருக்கமடையச் செய்தன.

அவரது ஆற்றலும் சுறுசுறுப்பும்தான் பெ(க)ற்றதைச் சமுதாயத்துக்குத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையும் செயற்பாடும் சமூக மட்டத்தில் அவருக்கு ஒரு தனியிடத்தைப் பெற்றுக்கொடுத்தது.

பலரும் 65 வயதில் ஓய்வெடுத்து ஒதுங்கிக் கொள்ள, அப்பா நிறுவனங்களை உருவாக்கி பல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முனைப்புக் காட்டினார். தான் சார்ந்த சமூகத்தின் மீது பெரும் அக்கறை கொண்டவராக இருந்தார்.

தமிழ் மொழியினதும் கலாசாரத்தினதும் தொடர்ச்சியே அப்பாவுக்கு மிக முக்கியமானதாக இருந்தது. நாங்கள் கனடாவில் வாழ்ந்தாலும், எங்கள் வாழ்க்கையை வளப்படுத்த எங்கள் தமிழ் வேர்கள் எங்கும் பரவ வேண்டியது அவசியம் என்பதை அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார்.

ஒருவர் மறையும் வரை, அவர் சமூகத்திற்கு ஆற்றிய பணியின் அளவையோ, அச் சமூகத்தில் அவர் ஏற்படுத்திய தாக்கத்தையோ முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது.

நாம் எப்போதும் எங்கள் வீட்டிக்கு வந்து சென்றவர்களை ஞாபகம் வைத்திருப்போம். வருவோர்,அப்பாவிடம் ஆலோசனைபெறவோ, உதவி நாடியோ அல்லது அவரது கதைகளை கேட்கவோ வந்திருப்பர். வேறு சிலர் தமது ‘ஆசிரியரை’ அல்லது ‘அதிபரைப்’ பார்க்க வந்திருப்பர். யார், எவர், எதற்கு வந்திருந்தாலும் அவருக்குத் தெரிந்தவரோ அல்லது தெரியாதவரோ என்றாலும், அன்போடும் ஒரு புன்னகையோடுமே அவர்களை வரவேற்பார். அப்பாவின் வசீகரமான ஆளுமைக்கு வர்க்கம், கல்வி அல்லது வயது போன்ற எல்லைகள் கிடையாது. பல முறை எங்கள் நண்பர்கள் அப்பாவால் திருடப்பட்டனர். அவர்கள் எங்களைப் பார்க்க வந்தாலும் அப்பாவுடன்தான் மணிக்கணக்காகப் பேசுவார்கள்.

அப்பா சமூகத்தோரால் நன்கு அறியப்பட்டதற்கும், பிறரால் அவர் கவரப்பட்டதற்கும் முதன்மைக் காரணங்களாவன, அவரது பல்துறை அறிவும் அதைக் கேட்போர் கட்டுண்டு நிற்கும் வகையில் பகிர்ந்து கொள்ளும் தன்மையுமே.

தனது ‘பல தவறுகளில்’ இருந்து தான் மட்டுமல்ல, ஏனையோரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வார். அப்பா எழுதிய ஒவ்வொரு கட்டுரையினதும் நோக்கமும் அதுவே. அவர் தனது கட்டுரைகள் மக்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும் என்றும் அவற்றால் அவர்கள் மாற்றம் காணவேண்டும் என்றுமே ஆசைப்பட்டார். 2013 ஜுன் மாதம் அப்பாவின் உடல்நலம் பாதிப்படையத் தொடங்கியது. பல மருத்துவரிடம் சென்றும் பல நிபுணர்களிடம் சென்றும் அவரது சுகவீனம் சரிப்படவில்லை. இதனால் ஆதங்கமுற்ற அவர், தனது மருத்துவ அனுபவத்தை மற்றவர்களுடன் பகிரும் நோக்கில் தனக்கே உரிய நகைச்சுவையுணர்வோடு ‘தாய்வீடு’ பத்திரிகையில் எழுதத் தொடங்கினார். அவரே எதிர்பாராத அளவுக்கு அக்கட்டுரைகளுக்குக் கிடைத்த ஆதரவு, அக்கட்டுரைகளைப் நூலாக்கலாமா? என அவரைச் சிந்திக்க வைத்தது.

அவரது அறிவு மற்றும் நம்பிக்கையைப் பகிரும் விருப்பத்தைக் கௌரவிக்கும் நோக்கோடு நாங்கள் இந்த புத்தகத்தை வெளியிடுகிறோம். அப்பாவின் கதைகளை, அவரின் நேசத்துக்குரிய நீங்கள் இரசிப்பீர்கள் என்று நம்புகிறோம்.



இறுதியாக அப்பாவின் நகைச்சுவையுணர்வுக்கும் எதிராளிக்கு பதிலளிக்கும் லாவண்யத்துக்கும் ஓர் உதாரணம்: அப்பா ஆரம்பத்தில் எழுத ஆரம்பிக்கும் பொழுது, எழுந்த விமர்சனம்,

“இவர் என்ன எழுதுகின்றார்...? ஒரு காரமுமில்லை, சாரமுமில்லை.”

இவ்விமர்சனத்திற்கு அப்பா அளித்த பதில்,

“நான் எழுதுவது பற்றி சிந்திப்பது சமைக்கும் பொழுதும் குளிக்கும் பொழுதும்தான். சமைக்கும் போது காரம் இருக்காது, குளிக்கும் போது சாரம் இருக்காது”.

எம் தேடலின் எல்லைக்குள் அப்பாவைப் போல் யாரும் இல்லை. இப்பிறப்பில் நாம் பெற்ற பெருவரம் எம் அப்பாவே.

அவரின் மரணம் இப்பிறப்பில் எமக்கு ஈடில்லாப் பேரிழப்பு.

**பிள்ளைகள்:** ***மணிவண்ணன், மணிமொழி, மணிவிழி***
**மருமகள்:** ***சுதர்சினி***
**பேத்தி: லட்ஷியா ஷாலினி**

■ ■ ■

# அதிபர் கனகசபாபதி பற்றி அறியவேண்டியவை அதிகம்

- வி. கந்தவனம் -

**கட்டழகன்:**
சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய காலத்தில் - 1957ம் ஆண்டைத் தொடர்ந்து வந்த காலத்தில் - 'கருப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு' என்று பாடியவாறு கன்னியர் பலர் கட்டழகன் கனகசபாபதியை வட்டமிட்டுச் சிறகடித்த செய்திகளைப் பலரும் அறியார். இருப்பினும் கட்டழகிகளைக் கண்டு கட்டழகன் கனகசபாபதி தளரவில்லை. பெரியோர் விரும் பியவாறே காங்கேசன்துறை குருநாதபிள்ளை மகள் அமிர்தகௌரிக்கே மாலைசூட்டினார்.

எனினும் அவர் குடித்தனம் நடத்தியது வேறொரு பெண்ணுடன். அந்தப் பெண்ணைப் பெற்றவர் பாவலர் துரையப்பாபிள்ளை. அந்த விடயத்தில் கனகசபாபதி ஒரு கோவலன் ஆனார். மாலையிட்டவளை விட்டு மாதவி யாகிய மகாஜன மாதுடன் அதிக பொழு தைக் கழிப்பதில் ஆசிரியர் கனகசபாபதி இன்பங்கண்டார். காலப்போக்கில் ஏழாலை யிலிருந்தும் ஒரு பெண் கண்சிமிட்டினாள். அவளை முந்திக்கொண்டு புத்தூர் பூவை இவரை மயக்கிச் சிலகாலம் கூடிக்கலந்தாள்.

**இயமனைப் பச்சடிபோட்டவர்:**
இவற்றைக் கண்டு பொறாமைகொண்ட இய மன் ஒருநாள் சொல்லாமற் கொள்ளாமல் பாசக் கயிற்றோடு இவரைக் கொண்டுபோக வந்துசேர்ந்தான். அது ஒரு மோட்டைச் சயிக் கிள் - மோட்டுச் சயிக்கிள் - விபத்து. கனக சபாபதிக்கு அது ஒரு NDE. NDE என்றால் Near Death Experience என்பதன் குறுக்கம். தமிழில் மயிரிழையால் உயிர்பிழைத்த அனு பவம் என்று சொல்லலாம்.

அதில் வெற்றிகண்டதற்காக இயமனைப் பச் சடிபோட்டவன் என்று அவரை அழைக்கலா னேன். பின்னாளில் கனடாவில் ஒரு பயங்கர 'பை பாஸ்' சிகிச்சையைத் தொடர்ந்து மீண் டும் பச்சடிபோட்டவன் கதையை நினைவு-படுத்தினேன். தனது நோயைப்பற்றி எனக் குச் சொல்லும்பொழுதெல்லாம், 'ஓய்! நீர் இயமனைப் பச்சடி போட்டவன் காணும்! இப்போதைக்கு அவன் உம்மை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான்' என்று சொல்லி வந்தேன். சும்மா சொல்லக்கூடாது. அவரும் நான் அப் படிச் சொல்வதைக் கேட்டுக் கொடுப்புக்குள் சிரித்திருக்கின்றார். சிரித்துக் கொண்டே அதுபற்றி தாய்வீடு இதழிலும் ஒரு கட்டு ரையில் எழுதியிருந்தார்.

**வாசகன்:**
இவரது கட்டுரைகளைப் படிக்கவேண்டிய ஒரு கட்டாயத்தில் நான் இருந்த பரிதாபத் தைப் பலரும் அறியார். அதையும் இந்த இடத்திற் சொல்லிவிடுதல் நல்லது. கட்டுரை ஒன்று பத்திரிகையில் வெளிவந்து இரண் டொரு நாட்களில் 'ஓய், படிச்சனீரே காணும்?' என்ற கேள்வியுடன் தொலைபேசி வரும். அது வரமுன் நான் படிக்கவேண்டும். தனது கட்டுரைபற்றிய எனது கருத்தை அறிவதில் அவருக்கு அத்தனை ஆர்வம்.


**பூந்தோட்டம்:**
தனது பூந்தோட்டம்பற்றியும் இடைக்கிடை என்னுடன் பேசுவார். அவர் என்னுடன் மட்டும் அதுபற்றிப் பேசியிருப்பார் என்றில்லை. ஊர் முழுக்கவே முரசறைந்திருப்பார். ஆனால் எனக்கு அதுபற்றிச் சொல்வதற்கு ஒரு கார ணம் உண்டு. TVI தொலைக்காட்சியில் நான் நடத்திவந்த கலங்கரைவிளக்கம் என்ற நிகழ்ச்சியில் அவரது பூந்தோட்டத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவன் என்ற வகை யில் ஒருவகை ஆர்வத்துடனேயே அதுபற் றிப் பேசுவார்.

ஒரு நாள் பசளைக்கு இவ்வளவு, அதுக்கு இவ்வளவு, இதுக்கு இவ்வளவு, கூலி இவ் வளவு என்று பெரிய கணக்கு ஒன்றை முடித் தார், ஏதோ நான்தான் பிசகைத் தீர்க்கின் றவன் போல. அமைதியாகக் கேட்டுவிட்டுச் சொன்னேன்: ஏனப்பா இவ்வளவு தொகையை மண்ணுக்குள் போட்டு ஒரு பூந்தோட்டத்தை வளர்க்க வேண்டுமா? பேசாமல் இச்செலவில் ஒரு சிறுதொகைக்குப் பூக்களை வாங்கி இரண்டு மூன்று சாடிகளுக்குள் வளர்க்க முடியாதா? என்றேன். அவர் உரத்த குரலில், 'இதுதானா காணும் உமது அழகுணர்ச்சி?' அழகுணர்ச்சி உள்ளத்தில் ஊறுவது. காசு பணத்தில் அல்ல என்றேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

**சரியான கோபக்காரன்!**
அதிபர் கனகசபாபதிக்குக் கோபம் வரும் என்பது கல்லூரிகளிற் பலருக்குந் தெரிந்த தொன்றுதான். ஆனால் நண்பர் கனகசபா பதிக்கும் கோபம் வரும் என்பது எனக்கு ஏற்கனவே தெரிந்தொன்றுதான். இவர் விரும் பிப் பழகிய ஒருவருடன் கோபங்கொண்டு சில வாரங்கள் அவருடன் பேசாதிருந்தார். சமயம் பார்த்து இருவரையும் ஒருநாள் ஒரு கூட்டத்திற் பேசவைத்துவிட்டேன். அன்றுமுதல் அவர்கள் மீண்டும் நண்பர்களாயினர். எழு-திவந்த இரு பத்திரிகைகளில் எழுதாமல் விட்டதற்கும் கோபந்தான் காரணம். ஆனால் அந்தக் கோபத்துக்கு அவர் காரணமில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். கனக சபாபதி அவர்களின் கோபம் வள்ளுவர் பெருமான் கூறும்

*குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி*
*கணமேயுங் காத்தலரிது*

என்பது போன்றது.



**கல்விக் காவலர்:**
நண்பர் கனகசபாபதி அவர்களுக்குக் கல்விக் காவலர் என்ற ஒரு பட்டத்தைக்கூட வழங் கியிருந்தேன். அதுபற்றியும் பலர் அறியார். காரணம் அவரே அதனைப் பாவிக்கவில்லை. அவர் எந்தப் பட்டங்களுக்கும் மயங்கி நின் றவரல்லர். கனடாவில் அவரைக் கௌரவிக்கப் பலஅமைப்புகள் முன்வந்தன. அவர் அவற்றை நன்றியுடன் மறுத்திருக்கின்றார்.

கனடாவில் அமைப்புகள் பல ஆங்காங்கு தமிழ்க் கல்வியில் ஈடுபட்டிருந்த காலகட் டத்தில் அதற்கு அரச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தவர் கல்விக் காவலரேயாவர். பல்கலாச்சாரத் திட்டத்தின்கீழ் தமிழ்மொழிக் கல்வியை அளிக்க முன்வந்த முதற் கல்விச் சபை நோத்யோக் கல்விச் சபையாகும். அது தயாரித்த பாடத்திட்டங்களுக்கு அமை யத் தமிழ்ப் பாடப்புத்தகங்களை எழுதுவித்து அவற்றை என்னிடம் காட்டி எனது உடன் பாட்டையும் பெற்றிருக்கின்றார்.

தனியார் அமைப்புக்கள் தத்தம் விருப்பத்தின் பேரிற் கற்பித்துவந்த ஒருமைப்பாடில்லாத தமிழ்க் கல்விக்கு எதிராகவும் குரல்கொ டுக்க அவர் பின்னின்றதில்லை. அரச அங் கீகாரத்தின் விளைவாகப் பல தகைமை சான்ற தமிழருக்கு ஆசிரிய பதவிகளையும் பெற்றுக்கொடுத்தார் பல்கலாச்சார ஆலோ சகர் பதவி வகித்த கனகசபாபதி அவர்கள்.

**'தமிழறிவு' பாடநூற் குழு உறுப்பினர்:**
கனடாவில் மட்டுமன்றிப் பிற ஐரோப்பிய நாடுகளில் தமிழ்க் கல்வி வளரவும் உத வியிருக்கின்றார். குறிப்பாக, மேலைநாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியம் (Western Tamil Schools Federation, U.K.) தமிழறிவு என்ற தொடரில் எழுதிய பாடநூல் குழுவில் கனடாவாழ் திரு.பொ.கனகசபாபதி, திரு. ம.செ.அலெக்சாந்தர், திரு.ம.சி. பிரான்சிஸ், கவிஞர் வி.கந்தவனம் ஆகியோரும் அங்கம் வகித்தமையைப் பலர் அறியார். தமிழறிவு தொடரில் பதினொரு பாடநூல்கள் வெளியி டப் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பி டத்தக்கது.

**கூட்டுப் பயணம்:**
2003ம் ஆண்டு வெற்றிமணி அசிரியர் மு.க. சிவகுமாரன் அவர்களுக்குக் கலாநிதிப்பட் டம் கிடைத்தமை குறித்த பாராட்டுவிழாவிற் கலந்துகொள்ள நாமிருவரும் யேர்மனிக்குச் சென்றிருந்தோம். பாராட்டுவிழா 11.05.2003ல் நடைபெற்றது. விழாவில் பங்குகொண்டதன் பின் சுவிற்சர்லாந்து சென்று அங்கு தமிழ்க் கல்வியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்மாருக்கு இலங்கந்தால் என்னும் இடத்தில் கருத்தரங் கும் நடத்தியிருக்கின்றோம். தொடர்ந்து அந் நாட்டிற் பல இடங்களைப் பார்க்கும் சுற்று லாவிலும் இருவரும் ஈடுபட்டோம். எல்லாம் சிவகுமாரன் செலவுதான்.

மீண்டும் இருவரும் அதே ஆண்டு யேர்ம னிக்குப் பயணமானோம். வெற்றிமணி ஆசி ரியர் சிவகுமாரனின் வெற்றிநிலா முற்றம் விழா 16.11.2003ல் அங்கு சிறப்பாக நடை-பெற ஏற்பாடாகியிருந்தது. வெற்றிமணியின் 99வது இதழ் வெளியீடு, அவரது தமிழே காதல் நூல் வெளியீடு, சிறுவருக்கு நடத் திய பல்வகைப் போட்டிகளிற் பங்கு பற்றி யவருக்குப் பரிசளிப்பு, திருமதி சுகந்தினி சுதர்சன் அவர்களின் கவிச்சித்திரம் நூல் வெளியீடு என்று பல நிகழ்ச்சிகள் அடங்கிய பெருவிழாவாக வெற்றிநிலா முற்றம் இருந் தது. இறுதிநாள் அரங்கம் குரும்பசிட்டி ஏ.ரி. பொன்னுத்துரை அரங்கம். அதனைச் சிறப்பிக்க கலைவேந்தன் வேல் ஆனந்தன் அவர்களும் கலந்துகொண்டார்.

**இறுதிப் பயணம்:**
கனடாவில் பல கூட்டங்களுக்கு நாம் இரு வரும் ஒன்றாகவே சென்று வந்திருக்கின்றோம். சில சமயங்களில் அவரது பிள்ளைகள் நான் இருக்கும் இடத்துக்கு வந்து என்னை யும் ஏற்றிக்கொண்டு செல்வர். சில சமயங் களில் எனது பிள்ளைகள் அவரது இடத் துக்குச் சென்று அவரையும் ஏற்றிக்கொண்டு சென்றதுண்டு. சொற்றொகுதிக் கூட்டத்துக்கு திரு. மணிவேற்பிள்ளை இருவரையும் ஏற் றிக்கொண்டு செல்வது வழக்கம். பொதுக் கூட்டங்களுக்கு எமக்குப் பார்த்தசாரதிப் பணி அதிகம் செய்தவர் டாக்டர் கதிர் துரை சிங்கம் அவர்கள்தாம்.

குமார் புனிதவேல் அவர்களின் சிற்றுந்திலும் நாம் சிலசமயங்களிற் சந்தோசம் தரும் சவாரிபோயிருக்கின்றோம். எமது கடைசிப் பயணச் சாரதியும் புனிதவேல் அவர்கள் தாம். புனிதவேல் கனகசபாபதியையும் என் னையும் 20.12.2014 சனிக்கிழமை பகல் 2.00 மணியளவில் பேளிங்டனுக்கு ஏற்றிக் கொண்டு சென்று, அங்குள்ள அதிசயம் ஒன்றைக் காட்டி மகிழ்ந்தார். அதிசயங் கள் புரிவதிலும் அவற்றைப் பிறருக்குக் காட்டுவதிலும் புனிதவேல் பெரியவேல்.

பேளிங்டனில் மேடும் பள்ளமுமான தெரு ஒன்று. அதில் மேட்டில் வாகனம் தன்பாட்டில் ஓடுவதுதான் அதிசயம். அதாவது கியர், அக்சிலேற்றர் எதுவுமே வேலை செய்யா மலே வண்டி ஏற்றத்தில் ஏறி ஓடுகிறது. புனிதவேல் ஸ்ரியரிங்கை மட்டும் கவனமா கப் பிடித்துக்கொண்டு சென்றார்.

நாங்கள் எவருமே வாகனத்தைவிட்டு இறங்க வில்லை. திரும்பிவரும்பொழுது அந்த மேட் டின் அடியில் ஈர்ப்புச் சக்தியை உண்டு பண் ணும் ஏதோ ஒரு தாதுப்பொருள் இருக்க வேண்டும் என்று பேசிக்கொண்டோம்.

இருந்தாற்போல் புனிதவேல் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார்.

அண்ணை இந்தக் கார் மேட்டிலை ஏறியது உண்மை என்றா நினைக்கிறியள்.

பின்னை என்னென்று நினைக்கிறது?

அது வெறும் மாயை அண்ணை. ஒரு illusion. நான் நம்பவில்லை.

இவ்வளவு நேரமும் பேசாமல் இருந்த நண் பர் கனகசபாபதி கலாய்க்கத் தொடங்கினார்.

கவிஞர் உண்மையா இல்லூசனா என்று திட்டவட்டமாச் சொல்லும்.

கார் மேட்டிலை ஏறியது உண்மை.


நான் இல்லை என்கிறேன். என்ன பந்தயம்.

நான் பந்தயத்துக்கு வரவில்லை.

அப்ப நீர் பயந்துபோனீர்!

இதுதான் அவர் எனக்குக் கடைசியாகக் கட்டிய பேய்ப்பட்டம்.

நண்பனே!
நீ வென்றுவிட்டாய்!



kandavanam.v@thaiveedu.com

# என் வாழ்வின் மகத்தான சகபயணி!!

## இளவாலை விஜயேந்திரன்:

கவிஞர். நாடக ஆசிரியர். ஊடகவியலாளர். இவரின் 'நிறமற்றுப் போன கனவுகள்' கவிதைத் தொகுதி வெளியாகியுள்ளது. யாழ். ஈழமுரசு பத்திரிகையில் பணிபுரிந்தவர். புலம்பெயர்ந்து நோர்வேயில் வசிக்கின்றார். சுவடுகள் ஆசிரியர் குழுவில் ஒருவர்.

அதிபரைப் பற்றி எழுதத் தொடங்குகிற பொழுது மனமும் கைகளும் ஏனோ நடுங்கத் தொடங்குகின்றன, என்னை அறியாமல். அவர் வாழ்ந்தபோது அவரது வாழ்வை நாம் சரியாகக் கொண்டாடினோமோ இல்லையோ என்ற சந்தேகம் எனக்குள் வலுத்துக்கொண்டிருக்கிறது. ஓர் அசாதாரண மனிதனாகவே தனது வாழ்வு முழுவதும் வாழ்ந்தவர் அவர். மற்றவர்கள் போற்றுகிற வாழ்வு என்பது இலகுவில் யாராலும் அடைய முடியாதது. அதிபர் அப்படித்தான் தனது வாழ்வு முழுமையும் இருந்தார்! அதனாற்றான், அவரது மறைவும் நம்ப முடியாத ஒன்றாக - நம்ப விரும்பாத ஒன்றாக இருக்கிறது.

எனக்கும் அதிபருக்குமான உறவுக்கு நாற்பது வயதாகப் போகிறது. இடையில் தொடர்புகள் அற்றிருந்தாலும், அவர், தனது ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போல - ஒருவேளை சற்றே அதிகமாக - என்னைத் தனது மனதில் இருத்தி வைத்திருந்தது அதிசயம் என்றே தோன்றுவதுண்டு. அவரது அதீத நினைவாற்றல் மாத்திரமே அதற்குக் காரணமல்ல. அவர் தனது மாணவர்களைத் தனது சொந்தப் பிள்ளைகளைப் போலக் கருதினார். அந்த வகை எண்ணம், அவர் பாடசாலையை எப்படித் தன் சொந்த வீடாக நினைத்தாரோ அது போன்றது. ஒருவர் பணியில் நிற்கும் நேரமளவே அதிபர் வீட்டில் இருந்தார். வீட்டில் தனது அலுவல்களை எவ்வளவு அக்கறையுடன் கவனிப்பார்களோ அதுபோலத்தான் அவர் பாடசாலையைக் கவனித்தார். செய்ய முடியாதது என்று அவருக்கு எதுவும் இருந்ததில்லை. எதுவுமே சாத்தியம்தான். அதனாலேயே மகாஜனா அவரது குறுகிய கால வழிகாட்டலில் சடுதியாய்த் தலை நிமிர்ந்தது. தனது பழைய பெருமைகளை எல்லாம் மீட்டெடுத்தது. மாணவர்கள் கல்வியில் மட்டும் சிறந்தால் போதாது என அதிபர் எண்ணிக்கொண்டேயிருந்தார். அதன் விளைவு பல்துறை வளர்ச்சியையும் பாடசாலை எட்டியது. இன்னும் விளக்கமாகச் சொல்வதெனில், என்போன்ற பலரும் வேறுதுறைகளில் தீவிரமாக ஈடுபட அவரது வழிகாட்டலும் ஆசியும் எப்போதும் இருந்தது.

அதிபர் ஒரு தலைசிறந்த ஆசிரியர் என்பது அவரிடம் விலங்கியல் படித்த எனக்கும், என்போன்ற பலருக்கும் தெரியும். வெறுமனே குறிப்புகளை வைத்துக்கொண்டு நேரம் கடத்தும் சிலரைத் தாண்டிவந்த எங்களுக்கு, அவரது கற்பித்தல் முறைமை ஈடுபாட்டுக்கு அப்பால் வியப்பையும் தந்தது. எமக்குப் பாடம் நடத்தும் அதே நேரம். அவர் மனதில் வேறு எண்ணங்களும் ஓடிக்கொண்டிருந்திருக்கும் என்றே தோன்றுகிறது. எமது வகுப்பில் இருந்து பார்த்தால் அலுவலகம் தெரியும். எங்களுக்கு குறிப்புகள் சொல்லும் அதேவேளை, அவரது பார்வை அலுவலகம் நோக்கி அடிக்கடி சென்று திரும்பும். அந்தப் பிரதேசத்தில் என்ன நடக்கிறது என்பது அவரது கவனத்தில் இருக்கும் என்றாலும் குறிப்பு ஒருவரி பிசகாது. ஒருவிடயத்தில் கவனம் குவிக்க முடியாத எங்களுக்கு இது புதினம்!

இரண்டு விடயங்கள் அதிபர் தொடர்பில் மனதில் அடிக்கடி வந்து போவதுண்டு. பொதுவாகவே மகாஜன நூலகம் நல்ல இலக்கிய நூல்களின் சங்கமம்தான். அதிபர் வந்தபின் அப்போதைய 'சமகால' எழுத்தாளர்கள் அனைவரது படைப்புகளும் அங்கு வந்து சேர்ந்தன. அந்த நூலகம் இல்லையென்றால் எனக்கு (என்னில் அதிகம் செல்வாக்குச் செலுத்துபவர் என நான் நினைக்கும்) சுஜாதாவை அதிகம் படிக்க வாய்ப்புக் கிடைத்திராது. ஜெயகாந்தனையும் தான். அதற்கேற்ப நூலகப் பொறுப்பில் எங்கள் தாவரவியல் ஆசிரியை திருமதி அனந்தசயனனை (பின்னாளில் மகாஜனாவின் முதல் பெண் அதிபராக வந்தவர்) நியமித்தவர் அதிபர். பணம் கொடுத்து நான் வாங்க முடியாத ரஷ்ய இலக்கியங்களை, நான் நூலகத்தில் பார்க்க விரும்புகிறேன் என்று கூறியதும், 'தாராளமாக வாங்கி வாருங்கள்' என்று கூறி அவற்றுக்குரிய பணத்தை உடனே தந்தார் எங்கள் ஆசிரியை. பாடசாலை நூலகம் தொடர்பில் இவ்வளவு சுதந்திரம், ஒரு மாணவனுக்கும் - ஆசிரியருக்கும், வேறெந்த அதிபரிடமாவது கிடைத்திருக்குமா என நானறியேன்!

மற்றது, 'பிச்சை வேண்டாம்' நாடகம் பற்றியது. அப்போதைய காலங்களில் பிறமொழி நாடகங்கள் கொழும்பு - பேராதனை - யாழ்ப்பாணம் (வீரசிங்கம் மண்டபம்) என்ற சூழலிலேயே நடந்தன. ஒரு முழுநீள, பிறமொழி நாடகம் கிராமத்தில் மேடையேறியதில்லை. 'மகாஜனன்' மலரை அச்சடித்த கடன், அதிபர் பாடசாலையைப் பொறுப்பேற்ற போது அவருக்கு வரவேற்புச் சொன்னது. ஏறத்தாழ இருமணிநேர நீளமான அந்த நாடகத்தில் கதாபாத்திரங்களின் பெயர்கள் கூடத் தமிழில் இல்லை. மிக வலிமையான பிரதி அது. சாதாரணமாக ஒரு கிராமத்தில் அது மேடையேற்றப்படலாமா என்ற சந்தேகம் அதை இயக்கிய அ.தாசீசியஸ் அவர்களுக்கும், பிரதான பாத்திரம் ஏற்று நடித்த பாலேந்திரா, ஆனந்தராணி, சாந்திநாதன், ஜெயக்குமார் போன்றோருக்கும் இருந்திருக்கக்கூடும். அதிபருக்கு இருக்கவில்லை. கடனைத் தீர்க்க அதிபர் இந்த நாடகத்தைப் 'பட்டிக்காட்டில்' மேடையேற்றினார். மாணவர்கள், பழைய மாணவர்கள் தீவிரமாக நுழைவுச்சீட்டுகளை விற்றார்கள். கனவிலும் நாங்கள் நினைத்தே பார்த்திராத (நாடகம் பார்க்கும்) வாய்ப்பு, நாடகம் வெற்றி!! கடன்? போயே போச்சு!!!



அதிபர் மகாஜனாவிலேயே தனது ஆசிரியப் பணியைத் தொடங்கியவர். அவரது அதிபர்ப் பணியும் மகாஜனாவிலேயே நிறைவு பெற்றது. இதற்கிடையில் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியிலும் அதிபராகப் பணிபுரிந்திருக்கிறார். அங்கிருந்து மகாஜனாவுக்கு அவர் மாற்றலாகி வந்தபோது அங்கு மாணவர்கள் 'அதிபரை விடமாட்டோம்' என்று உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்போது உண்மையிலேயே எம்மிற் பலருக்கு அதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் எம்மிடமிருந்து ஓர் அசாதாரண சூழலில் அவர் இளைப்பாறியபோது, எம்மில் எத்தனைபேர் அழுதிருப்போமோ தெரியாது - நான் அவர்களில் ஒருவன். ஏனெனில், எனது வாழ்வில் ஒரு மிக முக்கியமான திருப்புமுனையை ஏற்படுத்தியவர் அதிபர். நானும் அதிபரும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்த சம்பவங்கள் மூன்று உள்ளன. அவற்றில் ஒன்றில், மாணவனது உரிமையை ஆசிரியர் மீற முடியாது என்று எனக்கு ஆதரவாக நின்றது அதிபரின் பெருந்தன்மை. இன்னொன்றில், உயர்தர வகுப்பு மாணவர் மன்றத் தலைவனாக அப்போது இருந்த எனக்கு, மாணவ தலைவர் பதவி வழங்கப்படாதது தொடர்பில், என்பக்க நியாயத்தை ஏற்று, எனக்கும் என்போலப் பாதிக்கப்பட்ட வேறு சில மாணவர்களுக்கும் மாணவதலைவர் பதவியை வழங்கி, அதே தவறு மறுபடி நிகழாவண்ணம் உறுதி செய்தார். இது அவரது சாதுரியமான நிர்வாகத் திறனுடன், பாடசாலைக்குப் பெருமைதரும் மாணவர்களைச் சோரவிடக்கூடாது, அவர்களுக்கு உரிய மதிப்பைப் பாடசாலை வழங்கவேண்டும் என்ற பரந்த எண்ணத்தின் வெளிப்பாடு. மூன்றாவது, தற்செயலானது என்றாலும், என் வாழ்வின் முழுமையும் தொடரப் போவது!

சிறுவயதில் இருந்தே அவ்வப்போது மேடைகளில் ஏறியிருக்கிறேன். அது நாடகம் என்ற பெயரில் நண்பர்கள் செய்த காலக் கோளாறு. அதிலும் பெண்வேடம் என்றால், எனது தலைதான் உருளும்! ஆனால் அந்த நிமிடங்களில் நான் படுகிற அவஸ்தை சொல்லி மாளாது! கும்பலோடு மேடையில் ஏறி ஏதோ மாதிரித் தப்பி வந்துவிடுவேன்! ஆனால் இதை, ஆசிரியர் கதிரேசர்பிள்ளை பாஞ்சாலி வேடம் கட்டு என்றபோது வாழ்க்கை அடிவிளிம்புக்கு வந்துவிட்டேன் என்றே சொல்ல வேண்டும்! இதை அவரது மகனான ஆதவனோடு இரு வெவ்வேறு நாடகங்களில் செய்திருக்கிறேன் என்பதும் சுவாரசியம்தான். நான் பாஞ்சாலியானபோது அவர் கண்ணன்!! இன்று நான் ஆயிரம் பேர் அமர்ந்திருக்கும் மேடையிலும் எந்தக் கூச்சமும் இல்லாமல் நான் நினைத்ததுபோல அந்த நிகழ்வைத் திறம்பட நடாத்த உறுதுணை புரிந்தது - புரிவது இந்த நாடகங்கள் அல்ல, அது அதிபரின் ஒரு விருப்பம்!

அப்போது மகாஜனாவில் சிறுகதை, கவிதைக்கென வருடாந்தம் போட்டிகள் நடத்தப்படுவதும் பரிசுகள் வழங்கப்படுவதும் வழமை. (சிறுகதைப் போட்டியை நடத்தத் தொடங்கியோரில் பேராசிரியர் பொ. இரகுபதி ஒருவர்) இது உயர்தர வகுப்பு மாணவர்களை மாத்திரமே குறித்து நடத்தப்பட்டது. எமது (அதிபரின்) காலத்தில் சாதாரணதர மாணவர்களும் முதற் தடவை அனுமதிக்கப்பட்டோம்! ஆச்சரியமாக எனது சிறுகதை மூன்றாம் இடத்தைப் பெற்றது (முதலிடம் பெற்றவர் சேரன்). அசாதாரண மகிழ்வு அது, அந்த வயதில். 'எல்லாம் நல்லாத்தானே போகுது' என்று வடிவேலு மாதிரி யோசித்துக்கொண்டிருந்தேன்! வினை வேறு விதத்தில் வந்தது!

பரிசு பெற்றவர்கள், மாணவர்கள் முன்பு தங்கள் படைப்புகளை வாசிக்கவேண்டும் என்று 'அரச கட்டளை'. வேறுயார் - அதிபர் தான்! எல்லோரையும் ஊக்குவிக்கிறேன் என்பது அவர் எண்ணம். எனது நிலை???

முதற் பரிசு பெற்ற கதை, சேரன்! அறிவிக்கப்பட்டதும், ரஜனியிடம் கதையைக் கொடுத்துவிட்டு சேரன் ஒரு கரையில் நின்று பார்த்துக்கொண்டிருக்கிறார்! அட, இப்படியும் செய்யலாமா என்று நான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்! சேரனின் கதையை ரஜனி வாசிப்பதுபோல நான் செய்ய முடியாதுப்பா! அப்போது (9ம், 10ம் வகுப்புகளில் நாங்கள் ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் படித்துக்கொண்டிருந்தோம்) யாரைப் பிடிப்பது? இரண்டாம் மாடியில் இருந்து இறங்கி ஓடமுடியாதே!

சிக்கலில் மிகப் பெரிய சிக்கல், தனது மாணவர்களை ஊக்குவிக்கிறேன் என்று நிகழ்வுக்குத் தலைமை தாங்குவது அதிபர்!! அத்தனை வருட வாழ்வில் அப்படியொரு சிக்கலில் நான் மாட்டுப்பட்டதில்லை. உயிரா போகப்போகிறது, மேடையேறுவோம் என்று தீர்மானித்தேன். சுற்றி இருக்கிற நண்பர்கள் - வில்லன்கள் - ஒவ்வொரு முகபாவத்தில் நின்றார்கள்! அழுது விடுவேனோ என்று பயம் வந்தது. ஆகட்டும் பார்க்கலாம். பாவலர் துரையப்பா அரங்கில், நான் சிறுகதை வாசிப்பது வரலாற்றுத் திருப்புமுனை அல்லவா (எனக்கு)?


'கார்மேகங்கள் திரளுகின்றன' என்று தலைப்பை வாசித்தபோது, கொஞ்சம் நம்பிக்கை வந்தது. முதற் பந்தி - வெற்றி!! பிறகு 'சவுண்டு' கொஞ்சம் குறைந்தது. பிறகு, அதைவிட, அடுத்தடுத்த பந்திகள்?? நான் வாசித்தது எனக்கே கேட்கவில்லை!! அதிபர் வேறு 'பெலத்து வாசியும்' என்கிறார், நான் ஏதோ 'வச்சுக்கொண்டு வஞ்சகம் பண்ற' மாதிரி. வாழ்க்கையில் இனிமேல் இதுக்கே வரமாட்டேன் என்பதுபோல மனம் பல சிந்தனைகளை ஓட்டிக்கொண்டிருக்கிறது!! அது சிறுகதை என்பதால் தப்பித்தேன்!! ஆனால், அந்த ஒரு நிகழ்வுதான் எனது மேடைப்பயத்தைப் போக்கிற்று!

அதிபர் தனது மாணவர்கள் கௌரவிக்கப் படவேண்டும் என்று தன் மனதில் வைத்திருந்த உணர்வு எனது வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இன்று, நான் எந்த மேடையிலும் நிகழ்ச்சித் தொகுப்பாயினும், தலைமை தாங்குவதாயினும், விருந்தினராகச் செல்வதாயினும் ஒரு தயக்கமும் இல்லாமல் அரங்கை என்னால் இயன்றவரை சிறப்பிக்கிறேன். ஒவ்வொரு தடவையும், அதிபரை நினைக்கிறேன். அண்மையில் இங்கு அதிபரை நினைவுகூர்ந்த அடுத்த வாரம், பேர்கன் நகருக்கு ஒரு கவிதைத் தொகுதி வெளியீட்டில் சிறப்பு விருந்தினராகச் சென்றபோது, இந்தச் சம்பவத்தையும் நினைவுகூர்ந்தேன்! அவர் இல்லாத ஒரு வெளியை இப்போதும் என்னால் நினைக்க முடியவில்லை.

அதிபர் தனது நூல்களில் மிகப் பெறுமதி வாய்ந்த நூலான 'எம்மை வாழவைத்தவர்கள்' நூலின் பின்னட்டையில் தன்னைப்பற்றி நானே எழுதவேண்டும் என விரும்பினார். அது எனக்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பு என்றே நினைக்கிறேன். அது, அவர் என்மீது வைத்திருந்த மதிப்பையும் காட்டுகிறது. அவருக்கு மாணவனாக இருந்தமையும், அவர் அதிபராக இருந்த காலத்தில் அங்கு பயின்றமையும் எனக்குக் கிடைத்த அரிய பாக்கியங்கள் என்பது மிகைக் கூற்றல்ல. நான் வாழும் காலம் முழுமையும் அவர் நினைவு என்னைத் தொடரும். ஏனெனில், நான் வாழும் காலத்தில் கண்ட ஒரேயொரு பெருமனிதர் அவர் - தோற்றத்தை நான் கூறவில்லை. அவரது கனிவும், அன்பும் என்னை வாழ்நாள் முழுமையும் வழிநடத்தும் என்பது சத்தியக்கூற்று!

■ ■ ■

# சேர்! வணக்கம் சேர்!!



## க. சின்னத்தம்பி:

நல்லூர் ஸ்தான C. C தமிழ்க் கலவன் பாடசாலையின் முன்னாள் உப அதிபர். ஆர்மோனிய, புல்லாங்குழல் வாத்தியக் கலைஞர். அதிபரின் பூந்தோட்ட உதவியாளர்.

ரிங்... ரிங்... ரிங்... தொலைபேசி மணி அடிக்கின்றது. 416 283 1544 என்ற இலக்கத்திலிருந்து அழைப்பு. இந்த இலக்கத்தை முன்பு ஒரு-தடவை பார்த்த ஞாபகம்.

அழைப்பை எடுக்கின்றேன்.

'ஹலோ' என மிகவும் அமைதியாகக் குரல் கொடுத்தேன். "நான் கனகசபாபதி கதைக் கின்றேன்" என ஒரு பந்தாவுமில்லாமல் வெறும் பச்சைப்பிள்ளை போன்ற குரல். "சேர் வணக்கம்" நான் சொல்லி முடிப்பதற்கு முன்பே அவருஞ் சொல்லி முடித்தார். இரு வரும் நலம் விசாரித்துக் கொண்டோம்.

"நான் மாஸ்டர்......" என அவர் அன்பான தனது பாணியில் விடயத்தைத் தொடங்கி னார். "வீட்டிற் பூந்தோட்டமொன்று செய்யும் விருப்பங்கொண்டு அதற்கான ஆரம்பப்ப டிகள் சிலவற்றைச் செய்யத் தொடங்கியுள் ளேன். அதற்குக் கொஞ்சம் சரீர உதவி தேவைப்படுகின்றது"

"ஓம் சேர். அன்றொரு நாள் பண்டிதர் அலெக்சாந்தர் இதைப்பற்றிக் கூறியிருந் தார். உங்களுக்கென்றால் நான் செய்யாமல் விடுவேனா" எனக் கூறித் தொடர்ந்தேன்.

நான் சிலநாட்களில் வேலைக்குப் போக வேண்டி வரும் சேர். அப்படிப் போகாமல் ஓய்வாக இருக்கும் நாட்களில் உங்களுக்கு உதவியாயிருப்பேன்.

"ஓம் ஓம் வசதி கிடைக்கும் போது என் னையும் கவனித்துக் கொள்ளுங்கோ" என் றார். எனக்கு ஒரு புறம் பயம், மறுபுறம் அளவுக்கதிகமான மனக்கிளர்ச்சி. அவர் மீது எனக்கிருந்த அபரிமிதமான மதிப்பு, அவரோடு பழகக் கிடைக்கும் வாய்ப்பு என்பன மிக மகிழ்ச்சியைத் தந்தன.

பலராலும் போற்றப்படும் பெருமனிதர் என் னையும் மதித்து ஒரு உதவியைக் கேட்டு விட்டாரே என்ற சந்தோசத்தில் நிச்சயமாக அவருக்கு உதவி செய்யத்தான் வேண்டும் எனத் தீர்மானித்து விட்டேன். இது நிகழ்ந்தது 2011ம் ஆண்டாயிருக்கலாம்.

மறுநாட்காலை என் துவிச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு அவர் வீடு சென்றேன். அப்போது என்னிடம் கைத்தொலைபேசியும் இருந்ததில்லை. மெதுவாகச் சென்று சற்றுத் தயக்கத்துடன் கதவினைத் தட்ட மலர்ந்த முகத்துடன் கதவைத் திறந்தார். இருவரும் நன்கு அறிமுகமாகிக் கொண்டோம். பின் புறத்தில் உள்ள பூந்தோட்டத்திற்குச் சென் றோம்.

அங்கே பூங்கன்றுகள் சில வரவேற்பது போல ஆடி அசைந்து நின்றன. அங்குள்ள குறைபாடுகளையும் தேவைகளையும் ஒவ் வொன்றாகக் கூறத்தொடங்கினார். மிகவும் பரிபக்குவமாக என்னிடம் அவர் தேவைக-ளைக் கூறும் போது மறுக்காமல் மனஞ் சுளிக்காமல் உடனே அவற்றைச் செய்ய வேண்டும் என்று ஆவல் கொள்ளக்கூடிய வகையில் தேவைகளை வெளிப்படுத்தினார்.

பலவகையான திருத்தங்கள் செய்யவேண் டியிருந்தன. இடையிடையே பூங்கன்றுகள் நாட்டப்பட வேண்டியிருந்தது. அதை அவரும் உணர்ந்திருந்தார். அன்று தண்ணீர் பாய்ச் சியதோடு வேலை முடிந்தது. அன்றைய நாள் முதற்சந்திப்பிலேயே நாம் ஒருவரை-யொருவர் நன்கு புரிந்து கொண்டோம்.

அப்போதும் அவருக்குச் சற்று விரைவாக நடக்க முடியாத நிலை இருந்தது. நான் அவரை நடக்க வைப்பதில்லை. சிலவேளை களில் வேலைகளை விரைவாகச் செய்து முடிப்பதைக் கண்டு மனம் பூரித்துப்போவார். தண்ணீர் பாய்ச்சும் குழாய் ஒன்று கிட்டத் தட்ட 150 அடி நீளமிருக்கும். அதை வீட் டைச் சுற்றி இருபுறமும் இழுத்துச் செல்ல வேண்டும் உண்மையில் அவருக்கு அது கஷ்டமான வேலைதான். இருந்தாலும் பூக் கன்றுகளின் மேலும் பூவின்மேலும் அவ ருக்கிருந்த தீராத ஆசை எந்தக் கஷ்டத் தையும் பொறுத்துக்கொண்டு வெயில், மழை, பனி பாராது இயங்கச்செய்தது. நான் அவ ருடன் இணைந்தபின் அந்தக் கஷ்டமான வேலைகளை அவர் செய்யாது பார்த்துக் கொண்டேன். பூங்கன்றுகளுக்குத் தண்ணீர் விடுவது ஒரு சந்தோசமான பொழுதுபோக் காக எனக்கு அமைந்துவிட்டது.

அவரிடமிருக்கும் பூவகைகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலவற்றின் பெயர் களை மட்டுமே நானறிவேன், மல்லிகை, முல்லை, மணந்தரும் ரோசா, சீனியாஸ், செவ்வந்தி, செவ்வரத்தை என்பனவே என் மனதில் உண்டு. கிட்டத்தட்ட இருநூறு வகை யான பூமரங்கள் அவரின் பூந்தோட்டத்தில் இருந்தன. இன்னும் இருக்கின்றன எனக் கூறலாம். பூவைக் கையிற் கொடுத்தாற் கூட



அதன் பெயரை நானறியேன். அவரிடம் பூமரத்தின் ஒரு வேரைக் கொடுத்தாலே அதன் பெயரையும் பூர்வீகத்தையும் புட்டு புட்டு வைத்துவிடுவார். விலங்கியல் ஆசிரி யரான அவரது தாவர அறிவு என்னை வியக்க வைத்தது.

பெரும்பாலும் இரண்டு நாட்களுக்கொரு முறையாவது பூந்தோட்டத்தையும் அவரையும் தரிசித்து வருவேன். எங்காவது ஒரு பூங் கன்று நடுவதற்கு இடமிருந்தால் மறுநாள் அழைத்து பூங்கன்று வாங்கிவிட்டேன் என் பார்.

தொடர்ந்து நான் போகவில்லையென்றால் அவர் சற்றே மனம் குழம்புவதை உணர்ந்து கொண்டேன். செல்லமாகக் கண்டிப்பது போல் "என்ன அரிச்சந்திர பாகம் நேற்று" என்று விட்டு மீதியை மௌனித்து விடுவார். ஐயோ சேர் நேற்று அவசரமாக ஒரு பய ணம்போக வேண்டிவந்துவிட்டது என்று முடித்துவிட்டு வேலையை தொடங்கிவிடு வேன்.

ஒருபோதும் பாத்தியைச் சீர் செய்தல், களைபிடுங்குதல், நீர்ப்பாய்ச்சுதல், பூச்சி பிடித்தல், பசளையிடுதல் போன்ற பாடங்களை அவர் என்னிடம் ஒப்புவிக்கத் தவறுவதே யில்லை. நானென்ன காவலாளியும் மேற் பார்வையாளனுந்தானே எனத் தன் இயலா மையை நினைந்து சிறிது வருந்திக்கொள் வார்.

ஒவ்வொரு முறையும் நடுகை வேளையில் அவரின் வேலியோரமாக 120 பூம்பாத்திக-ளுக்குக் குறையாமாற் பூங்கன்றுக் கிழங் குகளை புதைத்து விடுவோம். ஓரிரு மணித் தியலாங்களிற் பாத்திவெட்டி அவற்றை நட்டு முடித்து விடுவேன்.

அவர் நம்பாதவர் போல, எல்லாம் நட்டாகி விட்டதா? என வியப்போடு கேட்பார். ஓம் சேர் என்பேன். எத்தனை பாத்தி வந்ததென் பார். பதிலில் திருப்தி அடைந்தபின் இன்னும் வேண்டுமா என்ற கேள்வியை அடுத்துக் கேட்பார்.

சில கிழங்குகள் முளைக்கவில்லை என்றால் தொல்லை பிள்ளைகளுக்குத்தான். எங்கு சென்றாவது வாங்கி வந்து விடுவார். உடனே என்னை அழைப்பார். நானும் போய் நட்டு விடுவேன்.

இவ்வாறாக மிகச் சிறப்பாகப் பூக்களை வளர்த்தோம். பசளை வகையை நன்றாகப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கிப் பூக்களாய்ப் பார்த்து ரசித்தோம். பச்சை, மஞ்சள், வெள்ளை, சிவப்பு, எனப்பல வர் ணங்களிலும் வேலிக்கு மேலாக வளர்ந்து பூத்திருந்தமை கண்கொள்ளாக் காட்சியாகத் தானிருந்தது.

ஒவ்வொரு பூங்கன்றையும் பக்குவமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்த அந்தக் கோம கன் தன்னைப் பாதுகாப்பதிற் சற்றுச் சிர மப்பட்டதை என்னால் உணர முடிந்தது. அவரே ஒரு உயிரியல் நிபுணர். உயிரியலில் ஏதுமேயறியாத நான் அவருக்கு என்ன ஆலோசனையைக் கூறுவேன்?

இடைக்கிடையே வைத்தியசாலைக்குப் போய் இரத்தமேற்றிக் கொண்டு வருவார். வந்ததும் என்னை அழைத்து, நான் இன்று போய்க் காற்றடித்துக் கொண்டு வந்துவிட்டேன், நாலைந்து நாட்களுக்கு நன்றாயிருப்பேன், பின்னர் என்ன நடக்குமோ யாரறிவார் எனச் சற்றுச் சந்தேக மனப்பாங்கோடு கூறுவார். அவர் மனதில் எப்போதும் பூந்தோட்டத்தின் சிந்தனையே நிறைந்திருந்தது. ஒரு பூக் கன்று கொஞ்சம் காய்ந்திருந்தாற் கூட அதற்கு வேண்டிய தேவையை எனக்குக் கூறாமல் விடமாட்டார்.

நான் சிலவேளை செல்லும்போது அவர் இல்லாவிட்டாலும் அவர் நினைத்தபடி எல்லா வேலைகளையும் முடித்து விட்டு வந்துவி டுவேன். அவர் சரியான மேற்பார்வையாளன் தானே. வந்ததும் அவற்றைப் பார்த்து விட்டு நன்றி சொல்வது போக நன்றாயிருக்கின்ற தென மெச்சித் தன் பெருந்தன்மையைக் காட்ட மறந்ததில்லை.

நடக்கவே கஷ்டப்படும் வேளையிலும் கூட அவர் வெளியே வந்து தேனீர் போட்டுத் தரவா? என ஒருமுறையேனும் கேட்காமல் விட்டதில்லை. அவ்வாறே அவரின் இரண்டு பெண் பிள்ளைகளுங்கூட என்னை ஆத ரித்துத் தந்தைக்குத் தப்பாத பிள்ளைகள் என்பதை எப்போதும் உணர்த்திக் கொண் டேயிருந்தார்கள். சில வேளைகளில் அவரின் ஆசையைத்தட்டாமல் நான் ஏற்றுக்கொண் டாற் தேனீர் ரெடியெனக் கூப்பிடுவார். சற்று ஒய்வெடுக்கும்படியும் கெஞ்சுவார்.

இதை நினைக்கின்ற போதெல்லாம் நெஞ்சு கனக்கின்றது.

இப்பொழுதும் வீட்டின் முன்பகுதியின் பூம் பாத்தியொன்றை நன்றாகச் சீர் செய்து ரியூலிப்ஸ் என்ற பூங்கிழங்குகளை ஒழுங்காக நடுவித்து வைத்திருக்கின்றார். அவை பூக்கும் அழகை நான் பார்க்கக் கிடைக்குமோ வென்று அடிக்கடி ஆதங்கப்பட்டுக் கொள் வார்.

யாராவது பூந்தோட்டத்தைப் பார்க்கவென்று வந்து விட்டாற் போதும் அவரின் முகம் புன்னகையாற் பூத்துவிடும். ஆனால் யாராவது சில பூக்களைத் தேவைக்கென்று கேட்டு விட்டாற் போதும் அவர் மனம் கொஞ்சம் சஞ்சலப்படும். சம்மதம் தெரிவித்தாலும் அதை நின்று பார்க்கமாட்டார். சிலவே-ளைகளில் என்னிடம் பொறுப்பித்துவிட்டுத் தான் மாறிவிடுவார்.

பூந்தோட்டத்திற்கு உதவியாயிருந்த என் னையும் தனது அன்புக்கரத்தாலும் அன்புக் காணிக்கையாலும் அரவணைத்து அனுப்பி விட ஒரு போதும் மறந்ததில்லை. படிப்படி யாகக் கொடுக்கின்ற படி ஆயிரக் கணக் கில் வந்துவிடும். அவர் என் மீது கொண்ட அன்பும் அரவணைப்பும் என்னை ஆட் கொண்டதாலும் அவர் மீது நான் கொண்ட மரியாதையாலும், ஒரு நாளைக்கு ஒரு முறையாவது அவரைப் பார்த்துவிடவேண் டும் என நினைப்பேன். முடியாவிடில் தொலை பேசியிலாவது குரலைக் கேட்டுக் கொள் வேன்.

சென்ற மார்கழி மாதம் 22ம் திகதி திங்கட் கிழமை அதிகாலை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்தேன், தொடர்பு கிடைக்கவில்லை. மகன் வீட்டுக்குப் போயி ருப்பார் என நினைத்தேன். மறுநாள் 23ம் திகதி செவ்வாய்கிழமை காலையிற் தொலை பேசியில் அழைத்தேன். கிடைக்கவில்லை.

செவ்வாய் இரவுதான் மணிக்குரல் மன்ன னைப் பிடித்தேன். எங்கு போயிருந்தீர்கள் என நான் கேட்பதற்கு முன்னர், அவர் "என்ன ஆளைக்கண்டு பிடிக்க முடியவில்லையே" என்றவர், "நான் போய்க் காற்றடித்துக் கொண்டு வந்துவிட்டேன். இரண்டு மூன்று நாட்களுக்கு உசாராயிருப்பேன்" என்றார். நான் நாளைக் காலையில் வருகிறேன் என்றேன், சரியென்றார். அதுவே நான் கேட்ட மணிக்குரலின் கடைசித்துளிகள் என்பதை அப்போது என்னாலுணர முடியவில்லை.


புதன் காலையிற் கோயிலுக்குப் போய்விட்டுப் பின்னர் அவரிடம் போனால் ஆறுதலாக அவரோடு கனநேரம் இருந்துவிட்டு வரலாம் என்ற எண்ணத்தோடு அந்தத் தில்லைச் சபாபதியைத் தரிசிக்கசென்று விட்டேன்.

அங்குதான் 10 மணியளவில் ஒரு அன்பர் வந்து கூறினார். அந்தத் தில்லைச் சபாபதி எங்கள் பொன் கனகசபாபதியையா அவர்க ளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டதாக.

தமிழ்த்தாயின் தலைமகன், தமிழர்களின் சபாபதி, பொன்மனச் செம்மல் சகலகலா வல்லுனர். ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கு, கலைக் களஞ்சியம், பல் கலைவேந்தன், வெள்ளை மனங்கொண்ட வெண்பனிப்பூவை இறைவன் கொள்ளை கொண்டுவிட்டார்.

தில்லைச்சபாபதியின் காலடியில் எங்கள் பொன் கனகசபாபதி அதிபரின் ஆன்மா ஆறுதலடைந்து கொண்டிருக்கும். அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று இறை வனை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

■ ■ ■




# சாதிய மரபில் சமநீதி காத்த சான்றோன் : பொ. க.

## - ம. செல்வராசா அலெக்சாந்தருடன் ஒரு நேர்காணல்

பண்டிதர் ம. செல்வராசா அலெக்சாந்தர் நீண்டகாலம் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலும் பலாலி ஆசிரிய கலாசாலையிலும் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பணிப்பாளராகவும், பனை அபிவிருத்திச் சபை பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 'வெற்றி பெற' என்ற சுய முன்னேற்ற நூலை எழுதியுள்ளார். இவரைப் பற்றி 2003ல் 'அலெக்சாந்தம்' என்ற நூல் வெளிவந்துள்ளது. இவர் அதிபர் பொ.கனகசபாபதியின் நெருங்கிய நண்பர்.

**உங்களுக்கும் பொ. கனகசபாபதி அவருக்குமான உறவு எப்படி ஏற்பட்டது?**

நான் யாழ்ப்பாணத்திலே, பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவும், தொலைநிலைக்கல்வி, ஆசிரியர் பயிற்சிப் பிரதிக்கல்விப் பணிப்பாளராய் இருந்தபோது, பல கல்லூரிகளுக்குக் கற்றல் கற்பித்தல் சம்பந்தமாகச் சென்று வந்திருக்கிறேன். ஆனால் அதிபர் கனகசபாபதி அவர்களை ஒருபோதும் கண்டதில்லை.

1994ம் ஆண்டென நினைக்கின்றேன், ரொறன்ரோ தமிழ்க் கூட்டுறவு இல்லத்தில் ஒரு பட்டிமன்றம் நடைபெறவுள்ளதாகவும், அதிலே பிரபல எழுத்தாளர் வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) போன்றோர் பங்கு பற்றுவதாகவும் அதற்கு நடுவராக வேண்டும் என ஸ்ரீகாந்தன் நடராஜா என்ற எனது முன்னாள் மாணவர் கேட்டார். நண்பர் மாணிக்கத்தோடு விவாதத்தில் கலந்து கொண்டேன். விவாதம் நடக்கும் வேளை வெள்ளை வேட்டி நீண்ட சட்டை அணிந்து ஒருவர் வந்தார். ஆளும் உயர்ந்தவர், பார்வையும் கூர்மையானது, அங்கு நடப்பவற்றைப் பார்த்துவிட்டுச் சிறிது நேரத்தில் சென்று விட்டார். என்னை அறியாமலே, அவர் யாரென பக்கத்திலிருந்த திரு. மாணிக்கம் அதிபரைக் கேட்டேன். அவர்தான் அதிபர் கனகசபாபதி என்று பதில் சொன்னார்.

சில நாட்களுக்குள்ளே செல்வரத்தினத்தோடு அவரைக் காணச் சென்றேன். அவர் இன் முகத்தோடு வரவேற்றார். அவருடைய திட்டவட்டமான பேச்சும், இருந்தோம்பி வாழ்வது விருந்தோம்பவே என்ற பண்பும் என்னை மிகக் கவர்ந்தது.

நான் பட்டிமன்றத்தில் பேசிய நற்றமிழ்ப் பேச்சைக் கேட்டதாகக் கூறினார். எனது சுயவிபரக்கோப்பைப் பார்த்து உமது தகுதிப்பத்திரங்கள் அநேகம் என்றார். வயதுப் பிரச்சினையால் வேலைபெறுதல் சற்றுக் கஷ்டம் என்றார். தற்போது வடயோக் கல்விச் சபையில் தமிழ் கற்பிக்க இடம் இல்லையென்றும், நான் கத்தோலிக்கராயிருப்பதால் கத்தோலிக்க கல்விச்சபையில் தமிழ்மொழி கற்பிக்கும் வேலை பெற வாய்ப்பு உண்டு என்றும் கூறினார்.

போப் ஜோன் பாடசாலையில் கத்தோலிக்கக் கல்விச்சபையின் கீழ் தமிழ்மொழி கற்பிக்கும் திரு. சயானந்தராஜாவிடம் என்னைப் பற்றிக் கூறியுள்ளதாயும் போய்ச் சந்திக்குமாறும் கூறினார்.

அங்கு சென்று திரு. சயானந்தராஜாவைச் சந்தித்தேன். உடனே கற்பிக்கும் வாய்ப்பு இன்மையால் தன்னார்வத் தொண்டாசிரியராய் ஆறுமாதம் இலக்கண இலக்கியம் கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டனர். கனடிய அனுபவம் பெற இத்தொண்டுப் பணி உதவும் என அதிபரும் உற்சாகப்படுத்தினார். உறவுக்கு உறைவிடமான அதிபர் உதவிபுரிவதிலும், தொடர்ந்து உற்சாகமூட்டிச் செயற்பட வைப்பதிலும் தன்னிகரற்றவராகத் திகழ்ந்தார்.

அதிபரதும் செல்வரத்தினதும் முயற்சியால் எனக்கு எற்றோபிக்கோ கல்விச்சபையில் தமிழ் கற்பிக்க இடம் கிடைத்தது.

பின்னாட்களில் எற்றோபிக்கோ பாடசாலையில் தமிழ்மொழி கற்கும் மாணவர் குறைவடைய, போப் ஜோன் பாடசாலையில் மீண்டும் இணையுமாறு அதிபர் அறிவுரை தந்தார். அதிபருடைய அன்பும் தமிழபிமானமும் அவரோடு மேலும் உறவை இறுக்கமாக்கிப் பல்வேறு தமிழ்மொழிச் செயற்பாடுகளில் ஈடுபடவைத்தது.

'அதிபர் கனகசபாபதி இந்தியாவில் விலங்கியலில் முதலாந்தரச் சித்தியெய்தி, தங்கப் பதக்கம் பெற்றதோடு, பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பணி செய்யும் வாய்ப்பும் வழங்கப்பட்டது.

அவற்றையெல்லாம் உதறித்தள்ளிவிட்டுத், தன் மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். தன் உழைப்பால் அங்கு அதிபருமானார். நாட்டுக்குள்ளேயிருந்த மகாஜனக் கல்லூரியை மருத்துவத்திலும் பிற துறைகளிலும் முன்னணிப் பாடசாலை ஆக்கியவர். இதைப் பிரபல எழுத்தாளரான எஸ்.பொ. எனக்குக் கூறியுள்ளார்.

ஒன்றிணைந்த பூரண ஆளுமையை அதிபர் கனகசபாபதியிடம் கண்டேன். சுருங்கச் சொல்லின் எதைப்பற்றிக் கேட்டாலும், அதுபற்றி ஓரளவு விளக்கிச் சொல்லக் கூடிய ஆற்றல் அவரிடமிருந்தது.

புலம்பெயர் தமிழ் இலக்கிய எழுத்தாளர், சமூக ஆர்வலன், கல்விமான், பூந்தோட்ட இரசிகன் எனப் பல முகங்கள் அவருக்கு இருந்தன.

அதிபர் கல்வி நிர்வாகப் பொறிமுறை வித்துவத்தை அறிந்தவர். கனடிய கல்வி நீரோட்டத்தில் பங்கு பற்றிய அவரது அறிவு என்னையும் என்னைப் போன்ற பலரையும், கனடாவில் தமிழை நிலைநாட்டும் நோக்கில் பல்வேறு பணிகளைச் செய்யத் தூண்டியது.

அதிபர் ஆசிரியர் பெற்றோர் கருத்தரங்குகள் நடத்தி, தமிழ்க்கல்விக்கு உந்துசக்தியாக விளங்கினார். ஆசிரியர் கற்பித்தற்றிட்டத்தில் சொல்லமைப்பு, சுருக்கமெழுதல், உரை நடை, செய்யுள் போன்றவற்றை மாணவர் தரத்திற்கேற்ப எவ்வாறு எழுத வேண்டும் என்பதில் கனடியக் கல்விக் கொள்கை சார்ந்து வழிகாட்டினார்.

அதிபர் வடயோக் தமிழ்ப் பெற்றோர் சங்கத்தை உருவாக்கினார். அதற்கு நம்பி வித்தியாநந்தன் தலைவராகவும், நான் செயலாளராகவும் இருந்தோம். வேறும் பல கல்விமான்களும் பெற்றோரும் ஆசிரியர்களும் செயற்பாடுகளில் பங்கேற்றனர். இச்செயற்பாடுகள் பல நன்மைகளை ஏற்படுத்தின.

அதிபர் கல்விச்சபை பணிகளில் இருந்து ஓய்வு பெற்ற பின், அதிபரது மாணவர்களான திரு. சங்கரும் திரு. மோகனும் தமது ஒன்ராறியோ தமிழ் நுண்கலை அக்கடமியில் அதிபராயிருந்து உதவுமாறு வேண்டினர்.

எத்தவித ஊதியமும் பெறாது வழிகாட்டித் தமிழ்க் கல்விக்கும் நுண்கலைக்கும் தொண்டு செய்தார். அந்த அக்கடமிக்கு திரு. இலங்கையன் செல்வரத்தினம், கவிஞர் கந்தவனம், யோ. மதனராஜா போன்ற பலரின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தார். நானும் அங்கு தமிழ் மொழி கற்பித்தல் பற்றிப் பேசியுள்ளேன்.

பிள்ளைகளுக்குக் கணிதம், மொழி போன்ற பாடங்களில் போட்டிப் பரீட்சைகளும் நடத்து வித்து ஊக்கப் பரிசில்களும் வழங்கினார். கல்விமான்களான இ.வே. செல்வரத்தினம் பேராசிரியர் பாலசுந்தரம், கவிஞர் கந்தவனம் போன்றோருடன் என்னையும் இணைத்து கனடிய கல்வித்திட்டத்திற்கேற்ப தமிழ்ப் பாடநூல்கள் எழுதி வெளியிடச்செய்தார். இலண்டன் மேலைநாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றிய இணைப்பாளர் திரு. யோசப் வில்வராஜா தங்களது உலகளாவிய தமிழறிவு நூல்களுக்குப் பயிற்சியும் பாடங்களும் எழுதித்தருமாறு கோரினார்.

திரு. ம.சி. பிரான்சிஸ் (ஓய்வு பெற்ற விலங்கியல் ஆசிரியர்) வோட்டலு நகரில் வசித்து வருகின்றார். அவர் இங்கு வந்து என்னுடனும் அதிபர் கனகசபாபதியுடனும் பேசினார்.

கவிஞர் கந்தவனம், குரு அரவிந்தன், ம.சி. பிரான்சிஸ், சந்திரசேகரம் ஆசியோருடன் சேர்ந்து பாடங்களும் பயிற்சிகளும் எழுதினோம். அதிபர் கனகசபாபதி எமக்கு வழி காட்டினார். எழுதப்பட்ட நூல்களின் சிறப்பு இயக்குநர் வில்வராஜ் குழுவினரால் பாராட்-

தொடர்தல் 88ம் பக்கம்

# சாதிய மரபில் சம...

87ம் பக்கத் தொடர்ச்சி...

டப்பட்டது.

அதிபர் தமிழ்க்கல்வியோடு மட்டும் நின்று விடவில்லை. கல்வி உளவியற் கருத்துக் களைத் தமிழ்ப்படுத்தி, பெற்றோர் விளங்கிக் கொள்ளவும் கையாளவும் எழுதினார். கனடிய தமிழ்க் கல்வி வரலாறு எழுதும் எவரும், அதிபரின் ஆக்கங்களைப் பார்க்காது, எழுத முடியாது என்ற நிலையை ஏற்படுத்தினார்.

தமிழ் கற்கும் மாணவருக்கு பயன்படும் வகையில் கனடாச் சூழலுக்கு ஏற்ற பாடல் கள் வேண்டும் என அதிபர் விரும்பினார். அதன் விளைவே திரு. குரு. அரவிந்தன் உருவாக்கிய 'தமிழ் ஆரம் 1' ஆகும். அதில் என் பங்களிப்பும் இருந்தது.

தமிழ் மொழியே என்னை அதிபரோடு நெருக்கமாக்கியது. எனது பிள்ளைகளின் நிகழ்ச்சிகள் பல அவரின் வழிகாட்டலில், அவரின் தலைமயில் நிகழ்ந்தன. அவரு-டைய ஆசியும் வழிகாட்டலும் எம்மோடு நிரந்தரமாக இணைந்திருந்தது.

### யாழ்ப்பாணக்கல்வி மரபும் அதிபரும் பற்றிய உங்கள் கருத்தென்ன?

அதிபர் கனகசபாபதி, யாழ்ப்பாணத்து சண்-டிலிப்பாயில் உள்ள ஆலங்குளாய் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். கிராமத்தில் உள்ள சமுக ஊடாட்டம் அறிந்தவர். அந்தந்தச் சமுக இடர்ப்பாடுகள் உணர்ந்தவர். இவற்றை எல்லாம் தான் எழுதிய கதாபாத்திரங்களின் ஊடாக, சமுக நியதிகளையும், சமுக அநீதிகளையும் வெளிக்கொணர்ந்துள்ளார். கனடாவிலே தாய்வீடு பத்திரிகையில் அவர் எழுதிய கருத்துக்கள் யாழ்ப்பாணச் சமுக அமைப்பையும் அது ஏற்படுத்திய மாறா வடுக்களையும் வெளிப்படுத்துவதாக அமைந் தன. யாழ்ப்பாணத்தின் கல்வி மரபு பற்றிய அதிபரின் கருத்துகளை ஆய்வதற்கு முன் அவருடைய கருத்துப் பின்னணி அறிதல் அவசியமாகும்.

ஈழத்திலே இவரைக் கவர்ந்த தேசியக் காங்கிரஸ் இயக்கத் தலைவர்களான திரு. ஹண்டி பேரின்ப நாயகம், செனற்றர் நாக-லிங்கம், ஒறேற்றர் சுப்பிரமணியம் போன் றோரின் கொள்கைகள் பற்றி என்னோடு பேசியுள்ளார். மேலும் இவர் இந்தியாவில் கற்றபோது திராவிட இயக்கங்களின் கருத் தும் இவருடைய எண்ணத்திலே மனித சமத்துவம், மனித உரிமைகள் என்ற மாண்புமிக்க உண்மைகளை உயர்ந்த தத்துவமாக்கியது.

யாழ்ப்பாண மரபிலே, திண்ணைக்கல்வி முறையும் முன்பு இருந்தது. இத்திண்ணைக் கல்வி மனுதர்ம சாத்திரம் கூறும் அரசர், அந்தணர், வணிகர், சூத்திரர் என்ற கோட் பாடு எந்தளவிற்குக் கடைப்பிடித்தது என்பது கேள்வியாயுள்ளது.

பின்வந்த மேற்குடியினர் எனத் தம்மை அழைத்துக் கொண்ட நாவலர் போன்றோர் சூத்திரரை மேற்சூத்திரர் கீழ்ச்சூத்திரர் எனப்பிரித்து நோக்கியதால் யாழ்ப்பணச் சாதியத்திற்குள்ளே கருத்துப் போர் நிகழ்ந்த தென்பது யாழ்ப்பாணச் சாதிய வரலாறு,

சாதியம் பார்த்தல், சாதிக்குள் சாதி பார்த் தல் யாழ்ப்பாணக் கல்வி மரபில் காட்டு வெள்ளம் போல் கரைபுரண்டோடியது. கிராமத்துப் பாடசாலைகளிலே ஒடுக்கப்பட்ட தமிழினத்திற்குக் கல்வி என்ற காற்றே வீசவில்லை. அது மதில் போட்டுத் தடுக்கப் பட்டது. மேலால் வீசிய காற்றிலே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', சாதியிரெண்டு, இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்-தோர் என்ற சாதியக் கருத்துகள் ஒலித்தன. இதைத் தமிழ் விழுமியம் என்றார்கள்.

இந்நிலையில் மிஷனறிப் பாடசாலைகளின் வரவு ஒடுக்கப்பட்ட தமிழினத்துக்கு ஊன்று கோலாகியது. இதனை அதிபர் அவர்கள் தமது வாழ வைத்தவர்கள் என்ற யாழ் கல்வி அதிபர் வரலாற்று நூலில் காட்டியுள்ளர்.

ஒடுக்கப்பட்ட தமிழரின் கல்வி வளர்ச்சியிலே எவரும் இந்துக்கல்லூரிகளில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை படித்து முன்னேறியதோ, படிப்பித்ததோ கிடையாது. அதிபர் கனகசபாபதி இதனை உணரந்தார். தான் அதிபராய்ப் பதவியேற்ற பாடசாலை யில் சாதிக்க முனைந்தார். முடிந்ததா?

### கல்வியில் சமநீதி என்பதில் அதிபர் கனகசபாபதியின் சாதனை பற்றிக் கூறமுடியுமா?

'உள்ளத்தாற் பொய்யாதொழுகும் உத்தமர் கனகசபாபதி அவருடைய உள்ளம் என்றும் சாதி, சமய பேதமற்று, உள்ளதை உள்ள வாறு கூறும் தன்மை கொண்டது.

அவர் எழுதிய யாழ்ப்பாண அதிபர்கள் வர லாற்றிலே யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிதா ரி.எம்.எப். லோங் சுவாமிக்கு முன்னுரிமை கொடுத்து அவர் யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு ஆற்றிய அரும்பெரும் செயல்கள் பற்றி எழுதியதிலிருந்து அவரின் நிறைந்த நோக்கை அறியலாம்.

அவர் சோமஸ்கந்தா கல்லூரிக்குச் சென்ற போது அங்கு நிலவிய சூழல் சாதியத்தின் கொடுமுடி எனலாம். புத்தூர் சூழலிலே பல சாதியப் பிரிவுகள் இருந்தன. அங்கு பெரும்பான்மையானோர் ஒடுக்கப்பட்ட தமிழி னத்தவர் ஆவர். புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் யானறிந்தளவில் ஒடுக்கப்பட்ட தமிழரெவரும் அனுமதி பெறவில்லை. கல் லூரிச் சூழலில் வாழ்ந்த மக்கள் பெரும் பாலும் தொழிலாளர். தோட்டத்தை நம்பி வாழும் கூலித்தொழில் செய்வோர். மற்றோர் பல சிறு தொழில்களை மேட்டுக் குடியின-ருக்காகக் செய்வோர். சொந்த நிலமோ, நல்ல வீடுகளோ அற்றோர். அவர்களுக்குக் கல்வி என்றால் எட்டாக் கனி. அது வேறு யாருக்கோ உரிய சொத்து என எண்ணுப வர்கள். அவர்களைத் தமது சொந்த நலனுக் காக ஆட்டுவிக்கும் சமூகம், கல்வி பெற வழிவகுக்கும் என்பது எதிர்பார்க்க முடியாது.

நெல்லியடி - துன்னாலையைச் சேர்ந்த சின்னப்பு, மிஷனறிப் பாடசலையிற் படித்து ஆசிரியரானார். அவர் அச்சுவேலியில் திரு மணம் செய்ததால் அங்கு மாற்றம் கோரி யிருந்தார். அதிபர் கனகசபாபதி, அந்த ஆசிரியரை தான் அதிபராயிருந்த சோமஸ்-கந்தாக் கல்லூரிக்கு மாற்றம் பெறச் செய்தார்.

திரு. சின்னப்பு ஆசிரியர், முதலாம் நாள் அதிபர் கனகசபாபதியிடம் தனது வகுப்பு வேலைகளைக் கையேற்றார். இதனையறிந்த மேற்குடியினர் அன்று மாலையே மிரட்டல்கள் அனுப்பினர். சின்னப்பு பாடசாலை வந்தால் உயிருடன் போகமாட்டார் என்பது சின்னப்பு ஆசிரியரைத் தடுமாற்றம் அடையச் செய்தது. ஆசிரியர் சின்னப்பு அடுத்தநாள் பாடசாலைக் குப் போகவில்லை. இதை அதிபர், தனது காரியாலய ஊழியர் மூலம் அறிந்தார். அவ்வூர்ச் சண்டியர் சிலர் சேர்ந்து சின்னப்பு ஆசிரியரை மிரட்டியதாக அவர் கூறினார்.

அதிபர் உடனே தனது 'ஸ்கூட்டர்' வண்டியை எடுத்துக் கொண்டு திரு. சின்னப்பு ஆசிரியர் வீட்டுக்குச் சென்றார். சின்னப்பு ஆசிரியர் பயந்து மறுத்தபோதும் தானே அவருக்குப் பொறுப்பு என்று கூறிக் கூட்டிவந்தார். கல்-லூரியிலே திரு. சின்னப்பு ஆசிரியருக்கு இடைஞ்சல் நேர்ந்தால் தான் அந்தக் கல்லூரியில் அதிபராய் இருக்கமாட்டேன் என்றும் கூறினார்.

இது யாழ்ப்பாணக் கல்வி மரபில் ஏற்படுத்-தப்பட்ட புரட்சி என்றே கூறுவேன்.

அக்காலத்திலே மானிப்பாயைச் சேர்ந்த ஆசிரியர் வைரமுத்து தமிழ்ப் பௌத்த சங்கம் ஆரம்பித்திருந்தார். சாதியால் மனிதம் ஒடுக்கப்படுவதைத் தவிர்க்க எந்த நபருடனும் கைகோர்க்க ஒடுக்கப்பட்டோரில் கற்றோர் பலரும் காத்திருந்தனர். சமவுரிமை கிடைக் காதபோதே ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த கற்றோனாகிய அம்பேத்கார் உட்பட பலர் சாதி பேதம் பாராட்டாத பிற மதங்க ளில் இணைந்ததாகத் இந்திய சமூக வர-லாறு கூறும்.

ஆதலினால் இந்தச் சாதிபேதம் தமிழினத்தை உடைத்துவிடும், இதனைத் தடுக்கக் கல்வி உதவவேண்டும் என்ற அசையாத நம்பிக்கை அதிபருக்குண்டு.


பௌத்த தமிழ்ப் பாடசாலையில் இணைந் தால் வேலைவாய்ப்பும் சமத்துவமும் கிடைக் கும் எனக் கருதிப் பலர் சேர்ந்தனர். இந் நிலை தொடர்ந்து வளர்ந்தால் பாதிப்பு கடுமையாக இருக்கும் என்பதை உணர்ந்த அதிபர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் ஒடுக்கப்பட்ட தமிழரது பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கினார். இதனால் வைரமுத்து ஆசிரியரால் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த சிங்கள தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சி, குன்றத்தொடங்கியது.

அதிபர் ஒடுக்கப்பட்ட தமிழ்ப் பிள்ளைகளுக்கு அனுமதி அளித்திராவிட்டால், பௌத்தம் தமிழரிடையே மேலும் மேலும் வளர்ந்தி ருக்கும். அச்சுவேலியில் சிங்கள தமிழ்ப் பௌத்த வளர்ச்சியை மறைமுகமாகத் தாக் கிக் கல்வி அனுமதி சகலருக்கும் கொடுத்து தமிழியங் காத்த பெருமை அதிபரைச் சாரும்.

அதிபரின் கடைசி முயற்சி 'கல்வியில் சமநீதி காண முயன்ற ஒடுக்கப்பட்ட தமிழினக் கல்வி முன்னோடிகள்' பற்றி தாய்வீட்டில் எழுதத் தகவல் திரட்டியதாகும். அவரின் மறைவு இந்த நல்ல கைங்கரியத்தை இருளச் செய்துவிட்டது.

அதிபர் கனகசபாபதியின் பொன்னான மனித நேய எண்ணமும் இயல்பும் என்றென்றும் போற்றுதற்குரியது. கல்வியுலகம் இவரின் சாதனைகளை ஆய்ந்து எழுதவேண்டும். இக்கல்விமான் கனடியத் தமிழ் கல்வி உலகில் என்றும் வாழ்வார்.

■ ■ ■



# அதிபர் பொ. கனகசபாபதி

**அவர்களது நினைவாக**

# இரங்கற் கூட்டம்

## பெப்பிரவரி 14 சனிக்கிழமை

## பி:ப: 2:00 மணி

**ஸ்கார்பரோ நகரசபை மண்டபத்தில்**

**Scarborough Civic Centre**

150 Borough Drive, Scarborough

(McCowan Road and Ellesmere Road)

**அவரது உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் மற்றும் அவரது பெருமையை உணர்ந்து பழகிய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்திவ் வுலகு.*

*குறள்: 336*

வி. கந்தவனம்: 416-286-0457

த. சிவபாலு: 416-546-1394

சின்னையா சிவநேசன்: 416-888-8950

# கனடாவில் அதிபரின் கல்விப்பணி


## எஸ். சந்திரபோஸ்

**கல்வியியலாளர். மலையகத்தில் நீண்டகாலம் பணிபுரிந்தவர். தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி (1996), எம்.சி. ஒரு சமூக விடுதலைப் போராளி (2008), எண்ணக்கோலங்கள் (கட்டுரைகள்), எண்ணமும் எழுத்தும் (கட்டுரைகள்), ஆகிய நூல்களின் ஆசிரியர். ஈழத்தின் புகழ் பூத்த இடதுசாரித் தலைவரான எம்.சி. சுப்பிரமணியத்தின் மகன்.**


எந்தவொரு சமூகத்தை எடுத்துக் கொண்டாலும் புலம் பெயர்ந்த மக்களின் முதற் சந்ததியினர் பல பிரச்சினைகளைச் சந்திப்பது இயல்பு. இதற்கு எங்கள் தமிழ்ச் சமூகமும் விதிவிலக்கல்ல. தாயகத்தில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தினால் உரிமை இழந்து, உற வுகளின் உயிரை இழந்து உடமைகளை இழந்து, தொழில் கல்வி என்பவற்றை இழந்து பூகோளத்தின் பல நாடுகளிலும் தமிழ் மக் கள் குடியேறினார்கள்.

இவ்வாறு கனடா நாட்டில் குடியேறிய மக்கள் புதிய காலநிலை, மொழி, பண்பாடு, கல்வி முறைகள், தொழில் வாய்ப்புக்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். ஆயினும் வாய்ப்புக்கள் நிறைந்த கனடா நாட்டில் குடியேறிய தமிழர்களின் இரண்டாம் தலை முறையில் இருந்தே தமிழ்ப்பிள்ளைகளின் கல்விமேம்பாட்டுக்குப் பல வழிகளிலும் தொண்டாற்றிய கல்வியியலாளர்களுள் முதன்மையானவராக அதிபர். பொ. கனகசபாபதி அனைத்து மக்களாலும் கௌரவிக் கப்பட்டவர் ஆவார்.

அதிபர் ஆரம்பத்தில் ரொறன்ரோ தமிழ்க் கூட்டுறவு இல்லத்தில் குடியிருந்த காலத்தில், அதே குடியிருப்பில் வசித்து வந்த ஆசிரியை திருமதி. கனகேஸ்வரி நடராசா அவர்களின் அறிமுகத்தாலும் வழிகாட்டலாலும் 1990ம் ஆண்டில் கனடிய கல்வி உலகில் தாம் கால்பதித்ததாகத் தமது எழுத்துக்களிலும் பேச்சிலும் தெரிவித்துள்ளார்.

1990ம் ஆண்டில் நோத்யோக் கல்விச்சபையில் (North York Board of Education) பல் கலாசார ஆலோசகராக (Multi Cultural Consulant) நியமனம் பெற்றார். இதன் மூலம் அதிபரின் கல்விப்பணி இங்கு ஆரம்பமானது. தாயகத்திலும், நைஜீரிய நாட்டிலும் கல்விச் சேவையில் பெற்றுக்கொண்ட கல்விசார் புலமையும், அனுபவங்களும் கனடாகல்விச் சபைகளில் இணைவதற்கான 'Letter of Eligibility' Certificate உம் இவரது கல்விச் சேவைக்கு உறுதுணையாக அமைந்தன.

நோத்யோக்கல்விச் சபையில் பல்கலாசார ஆலோசகராக கடமைகளை ஏற்றுக் கொண்ட இவர் தமிழ்ப்பாடத்திட்டம் (Curriculum) தயாரிப்பதற்கு ஒரு குழுவை அமைத்துக் கொண்டார். அதில் அதிபருடன் இணைந்து கனகேஸ்வரி நடராஜா, திலகா கணபதிப்பிள்ளை, செ. அழகேந்திரா ஆகியோர் கடமைபுரிந்தனர்.

தமிழ் ஆங்கில மொழி இலக்கண வேறுபாடுகள் குறித்து மொழி முகவிபரத்திரட்டு (Language Profile), எங்கள் தாய் நாட்டின் கல்விமுறைக்கும் கனடா நாட்டுக் கல்விமுறைக்குமுள்ள வேறுபாடுகள் குறித்து நாட்டு முகவிபரத்திரட்டு (Country Profile). என்ற நூல்களைத் தயாரித்தனர். இவை புலம் பெயர்ந்து வந்த தமிழ்ப் பெற்றோருக் கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கனடாவின் கல்விமுறைகள் ஆங்கில மொழி அமைப்புப் பற்றி அறிந்து கொள்ளவும் கற்பிக்கும் ஒவ்வொரு பாடங்களுக்கான பாட அலகுகளைத் (Syllabus) தயாரிக்கவும் உதவுவதாக அமைந்தன.

முதலாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தமிழ் மொழிப்பாட வகுப்புக்கள் வாரத்திற்கு இரண்டரைமணி நேரம் முழுநேரப் பாடசாலை முடிவடைந்த பின்னரும் சனிக் கிழமைகளிலும் கற்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் தமிழ் குடும்பங்களைச் சந்தித்து அவர்களின் பிள்ளைகள் தமிழ் மொழியை கற்க ஊக்குவித்தார். கனடிய கல்வி முறைகள் மாணவர்களுக்குக் கல்விகற்பதில் ஏற்படும் பிரச்சினைகளை இனம் காணலும் அதற்கான ஆலோசனைகளை வழங்கும் பணியிலும் ஈடுபட்டார். பிள்ளைகளுக்கு மட்டுமன்றி தமிழ்ப் பெற்றோருக்கும் கனடிய கல்வி முறைகள் பற்றிய அறிவூட்டல்களும், ஆலோசனைகளும் வழங்குவதற்கு பெற்றோர் ஆசிரியர்களை அழைத்து கூட்டங்கள் நடத்தினார். புதிய சூழலில் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்குப் பாடசாலையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குப் பெற்றோர் பிள்ளைகளைக் குறைகூறாது பெற்றோரும் இந்நாட்டின் கல்விமுறை, விழுமியங்கள் பற்றிய தமது அறிவினை விருத்திசெய்து பிள்ளைகளுக்கு வழிகாட்டவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பெற்றோர்களும் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் சந்திப்புக்களை ஏற்படுத்தி பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் பெற்றோர் ஆசிரியர்களின் பங்களிப்புக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும், தாயகத்தின் பரீட்சை முறைபோல் இல்லாது தொடர்மதிப்பீடுகள் மூலம் மாணவர்களின் கல்விகற்றலில் ஆர்வத்தைத் தூண்டும் முறைகள் பற்றியும் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தார். ஆரம்பத்தில் இருபது முப்பது பெற்றாருடன் ஆரம்பித்த கருத்தரங்கு



நிகழ்வுகள் ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேயே மண்டபம் நிறைந்த பெற்றோரைக் கொண்ட காலந்துரையாடல் நிகழ்வுகளாக அமைந்தன.

பாடசாலைக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார். புலம் பெயர்ந்து வந்த பிள்ளைகள் சிலர் பிறப் புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள் போன்ற ஆவணங்கள் (Document) இன்றி இருந்தனர். அவற்றை பெற்றுக்கொள்வதற்கான மாற்று ஒழுங்குகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார்.

தமிழ் மொழி கற்பதில் மாணவர்கள் பலர் அதிக அக்கறை காட்டியதனால் மாணவர் தொகை அதிகரிக்க ஆரம்பித்தது. இந்த சந்தர்ப்பத்தில் அதிபர் பாரம்பரிய மொழிக் கல்வி ஆலோசகராக நியமனம் பெற்றார் (Heritage Language Consultant) இவ் வேளையில் தமிழ்ப்பாட நூல்களை எழுது விக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டார். தமிழ் என்னும் தலைப்பில் ஒன்று முதல் எட்டுப் பாடநூல்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்கள் ஆகியோரின் துணையுடன் எழுதி வெளியிடப்பட்டன. இந்நூல்கள் தமிழ்மொழி கற்கும் மாணவர்கட்குப் பெரிதும் உதவின. இக்காலகட்டத்தில் பல கருத்தரங்குகள் (Seminars) பட்டறைகள் (Work Shop) போன்றவை ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டன.

கற்றலில் விஷேட தேவையுள்ள பிள்ளைகள் சம்பந்தமான (Special Needs Children) ஆய்வுகளை கல்வியியலாளர்கள் உளவியல் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டதுடன் இத்தகைய பிள்ளைகளின் விஷேட தேவைகளை இனம்காணல், நிலைப்படுத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற செயன் முறைகள் மூலம் அவர்களுக்கு ஏற்றவகையில் கல்வி செயற்பாடுகள் நடைபெற்றன.

Yorkdale Secondary Adult School இல் 21 வயதுக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்களுக் கும் கல்விகற்பிக்கப்பட்டது. இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடு சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கவும், உதவிகள் வழங்கவும் புதன் கிழமைகளில் அப்பாடசாலைக்கு அதிபர் விஜயம் செய்வார். அவர்கள் கருத்துக்களையும், குறை, நிறைகளையும் கேட்டு அவற்றிற்கான பரிகாரங்களைச் செய்தார்.

Mike Harris ஒன்ராரியோ மாகாண முதல்வராகப் பதவி ஏற்றகாலத்தில் ரொறன்ரோவில் இயங்கிவந்த பல பாடசாலைச் சபைகளை ஒன்றிணைத்து ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையினை அமைத்தார். இவ்வேளையில் அதிபர் அவர்கள் தமிழ்மொழி இணைப்பாளர் (Tamil Language Co-ordinater) ஆக பதவியினைப் பெற்றுக்கொண்டார். இச் சந்தர்ப்பத்தில் தமிழ் படிக்கும் மாணவர் தொகை பெருகியும், ஆசிரியர் தொகை நூறைத்தொட்டும் இருந்தது.

1995ல் பல்கலைக்கழகத்தின் அனுமதிக்குத் தமிழையும் ஒரு பாடமாகப் படிக்கும் சந்தர்ப்பம் தமிழ்மாணவர்களுக்குக் கிடைத்தது. இந்த விஷேடசித்தி பெறுவதற்கான தமிழ் வகுப்பில் கற்பிப்பதற்கான பாடத்திட்டத்தை அதிபருடன் இணைந்து ஆசிரியர்களான கனகேஸ்வரி நடராஜா திலகா கணபதிப் பிள்ளை சு.அழகேந்திரா தயாரித்தனர். இப் பாடத்திட்டத்தின் அடிப்படையிலேயே ஆரம்பத்தில் 9ம் வகுப்பிலிருந்து 13ம் வகுப்பு வரையும் Credit Program தமிழ் மொழி கற்பிக்கப்பட்டது. 2000 ஆண்டின் பின்னர் 9ம் வகுப்பு முதல் பல்கலைக்கழக புகுமுகத் தேர்வு 12ம் வகுப்புடன் நடைபெறுகின்றது. இவ்வகுப்புக்களுக்கு தமிழ் படிப்பிக்கும் ஆசிரியர்கள் (Ontario Teacher's Certificate) ஒன்ராரியோ ஆசிரியர் சான்றிதழ் பெற வேண்டும். ஆயினும், சில விஷேட கற்றல் நெறிகளுக்கு அமைய இச்சான்றிதழ் பெறாதோரும் தமிழ் கற்பிக்கும் வாய்ப்புள்ளது.

அதிபர் அவர்கள் குறுகியகாலம் தமிழ் கற்பித்தல் வகுப்புக்களில் ஆசிரியராகப் பணி புரிந்தபோதிலும் கல்வி நிர்வாகத்திலும் அதனோடு ஒட்டிய நூல்வெளியீடு, அருஞ் சொல் அகராதி ஆக்கம், கல்விக்கருத்தரங்குகள், மாணவர்கள் குறைகளைதல், பெற்றார் ஆசிரியர்கள் சந்திப்புக்கள் எனப்பல கல்விச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டார்.

தமிழர்தகவல் ஆசிரியர் திரு. திருச்செல்வம் அவர்களின் தூண்டுதலால் தமிழர் தகவலில் தொடராக எழுதிய கட்டுரைகள் 'அதிபர் ஒருவரின் கூரிய பார்வை', 'பெற்றோர் பிள்ளைகள் உளவியல்' என்னும் தலையங்கங்களில் நூல் வடிவம் பெற்றன.

இதனைவிட தமிழ்படிக்கும் சிறார்களுக்கு ஏற்ப மாறன் மணிக்கதைகள் பாகம் ஒன்று, இரண்டு என இருநூல்களை வெளியிட்டார்.

அதிபர் ஓய்வு பெற்ற பின்னரும் ரொறன்ரோ கல்விச் சபையின் பணிப்பாளராக இருந்த Elizabeth Choelo வின் வேண்டுதலின் பெயரில் கல்விச் சேவையில் Private Consultant ஆகப்பணிபுரிந்தார். கனடாவில் வெளிவரும் பத்திரிகைகள் பலவற்றில் கல்வி சம்பந்தமான கட்டுரைகளை எழுதிவந்தார்.

அக்கட்டுரைகள் இரு நூல் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. ஈழத்தின் கல்வி வரலாற்றையும் அதில் பங்களிப்புச் செய்த அதிபர்களின் சேவைகளையும் கூறும் 'எம்மை வாழவைத்தவர்கள்' என்ற நூலையும் தாவரவியல், விலங்கியல், மருத்துவம் என்று கல்வியியல் தகவல்களை உள்ளடக்கிய 'மரம் மாந்தர் மிருகம்' என்னும் நூலினையும் வெளியிட்டுள்ளார்.

கல்வித்துறையுடன் இணைந்த கலை, இலக்கியம், விளையாட்டுக்கள் போன்றவற்றிலும் ஆர்வம் காட்டி வந்தார். கனடா தமிழ் இசைக் கலாமன்றத்தின் ஆலோசகராக இருந்து தமிழ் குழந்தைகளின் இசைக்கல்விக்கும் ஊக்கமளித்தார். நடனநிகழ்ச்சிகள், நாடகங்கள், போன்ற நுண்கலைகளுக்கும் ஆதரவளித்துவந்தார். இவரது கல்விச்சேவையினால் கனடிய தமிழ் சமூகம் இன்று பலதுறைகளில் முன்னேறிச் சாதனைகள் பல படைத்து வருகின்றது. இன்று அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் எங்கள் மத்தியில் இல்லை ஆனால் அவரது கல்விப் பணிகள் என்றுமே போற்றப்படும்.

வாழும் போதே பெரியோரைக் கௌரவிக்கவும் கனம் பண்ணவேண்டும் என்ற ஆவலினால் ரொறன்ரோ தமிழ்க் கூட்டுறவு இல்லத்தின் இயக்குநர் சபை 2013ம் ஆண்டில் நடைபெற்ற வெள்ளிவிழா ஆண்டு வைபவங்களின் போது அவரால் தமிழ் கூட்டுறவு இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்ட நூல் நிலையத்திற்கு 'அதிபர். பொ.கனகசபாபதி நூல் நிலையம்' எனப்பெயர் சூட்டி அவரால் அப்பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

■ ■ ■

# ஒரு நட்பின் பயணம்

- கதிர் துரைசிங்கம் -

**1957** மே மாதம் 10ம் திகதி திரு. பொ. கனகசபாபதி மகாஜனக்கல்லூரியின் H.S.C l வகுப்பில் இருந்த எனக்கு விலங்கியல் ஆசிரியராக வருகிறார். இரண்டாம் நாள் வகுப்பு எடுக்க வந்த கனகசபாபதி மாஸ்ரர் "வகுப்பின் உள்ளே மாத்திரம் நான் ஆசிரியர், வெளியே நான் உங்கள் நண்பன்" என்று பிரகடனம் செய்கிறார். மாத இறுதியில் சென்னை சென்ற மாஸ்ரர், B.Sc. (Hons) Zoology க்கான சான்றிதழோடு Madras Presidency யின் முதல்மாணவனுக்கான தங்கப்பதக்கத்துடன் திரும்புகிறார்.

மறுநாள் மாஸ்ரர் வகுப்புக்கு வர, அவரின் பிரகடனம் ஞாபகத்திற்கு வந்தது. வகுப்பறைக்கு வெளியே மாஸ்ரரிடம் "உங்கள் சாதனையைக் கொண்டாட எங்களைப் படம் பார்க்கக் கூட்டிச்சென்று விருந்துபசாரமும் செய்யவேண்டும்" என நான் கேட்டேன். கலரி, 3rd class மட்டும் தெரிந்திருந்த எங்களை 1st Class ல் அமர்த்தி எங்களுடன் மாஸ்ரர் பார்த்து மகிழ்ந்த படம் 'வணங்காமுடி'. அன்றுதொட்டு இறுதியாத்திரை வரை வணங்காமுடியாக முழுமுடியுடன் திகழ்ந்தவர் எங்கள் கனெக்ஸ்.

1963ல் நான் விடுமுறையில் மாஸ்ரரைச் சந்தித்தபோது தனக்குத் திருமணப் பேச்சு நடக்கிறது என்று சொல்லி, பெண்ணின் விபரமும் கூறினார். கொழும்பு சென்றதும் G.P.O Library யில் ஒரு அங்கத்தவராகி அங்கு Librarian ஆக பணிபுரிந்த அமிர்த கௌரிநாயகியைக் கண்டு ஒரு நூல் பற்றிக் கேட்டதன் மூலம் அவரைப் புரிந்துகொண்டேன். எனது சிபாரிசை ஏற்ற மாஸ்ரர் அதே ஆண்டு கௌரியை மணந்தார். நட்பையும் நன்றியையும் வெளிக்காட்ட எனது திருமணத்தில் மணப்பந்தல் அலங்காரம், நிகழ்வொழுங்கு என்று பல பொறுப்புகளை மாஸ்ரர் ஏற்று அசத்தினார். எனது திருமண நாள், அவரின் பிறந்த நாள் (Sept 04) இரண்டும் ஒன்றாயின.

Nigeria வின் Sokoto மாகாண அரசினால் ஆசிரியர்களாக ஒப்பந்த நியமனம் பெற்ற மாஸ்ரரும், அவரது மனைவியும் எனது துணைவியாரும் 1981ல் Nigeria சென்றனர். தொழில் தேடி நானும் 1982ல் Sokoto சென்றேன். தனியார் மருத்துவமனையில் வைத்தியராக நான் நியமனம் பெறும் வரை எனது துணைவியாரும் நானும், மாஸ்ரர் மனைவி பிள்ளைகளுடன் ஒன்றாகவே இருந்தோம். கௌரியின் கைவண்ணத்தில் சமையலும் மாஸ்ரர் கௌரி தம்பதிகளின் விருந்தோம்பலும் பலருக்கு வரப்பிரசாதமாயிற்று. படம் பார்த்தல், சீட்டாடுதல், நண்பர்களுடன் கலந்துரையாடுதல் இவை யாவும் இருவருக்கும் நன்றாகப் பிடித்த பொழுதுபோக்கு.

ஆசிரியராக ஆரம்பித்த மாஸ்ரர் Sokoto மாகாண விவசாயக் கல்வி அதிகாரியாக உயர்ந்தார்.

எனது மருத்துவமனை 210 கி.மீ. தூரத்தில் இருந்தபோதும் வார இறுதியிலும் வசதி வரும்போதும் இரு குடும்பங்களும் சந்திப்பதை வாடிக்கையாக வைத்திருந்தோம். மாஸ்ரர் குடும்பமாக ஒருமுறை பயணிக்கும் போது விபத்தில் மோட்டார் வண்டி குடை-சாய்ந்தது. எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. கௌரி சொல்லி எனது மனதில் பதிந்த வாசகம் - 'மாஸ்ரருக்கு மனைவி பொருத்தம் அமைஞ்சிட்டுது. ஆனால், வாகனப் பொருத்தம் அங்கும் இல்லை, இங்கும் இல்லை.' கனடாவில் கனெக்ஸின் போக்குவரத்து வசதியை நிவர்த்தி செய்வதில் கணிசமான பங்கை நான் ஏற்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

Nigeria வின் பொருளாதாரம் சுருங்குவதையும், இலங்கையின் நிலவரம் சீராக இல்லை என்பதையும் உணர்ந்த எம்மவர் கனடா வரத் தொடங்கினர். 87 ஜனவரியில் இரு குடும்பங்களும் ஒன்றாக அமெரிக்கா வந்து ஜன. 21 அதிகாலை Montreal லில் அகதி நிலை கோரினோம். ஆசிரியராக, குடும்ப நண்பனாக இருந்த மாஸ்ரர் சகமாணவனாகி French, Computer, Book Keeping என்று என்னுடன் படித்தார். ஜூலை இல் S.I.N கிடைத்ததும் இருவரும் குடும்பமாக Toronto வந்தோம். இருவரும் பாதுகாப்பு தொழிலை ஒரே நிறுவனத்தில் மேற்கொண்டோம். பின்னர், மாஸ்ரர் Gas Station ல் தனது தொழிலைத் தொடங்கினார். இதற்கு மத்தியில் சுவாசப்பையில் சத்திரசிகிச்சை பெற்ற கௌரிக்கு மீண்டும் சுவாசப்பை பாதிக்கப்பட்டு 1988 ஒக்ரோபரில் எம்மை விட்டுப் பிரிந்தார்.



வாழ்க்கையைச் சவாலாக எடுத்த கனெக்ஸ் தந்தையும் தாயுமாகி இயங்கினார். North York District School Board ல் ஆசிரியராக ஆரம்பித்த கனெக்ஸ் Counselor ஆகி பின்னர் பல்கலாசார ஆலோசகராக நியமனம் பெற்றார். கனடாவில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்க மூலவேராக இருந்து தலைமை ஏற்று ஏழுவருடங்களாகக் கடமையாற்றினார். அவருடன் உபதலைவராக நான் பணியாற்றினேன். சங்க அங்கத்தவர்களில் 75 வீதமானவரை சேர்த்த பெருமை அவரையே சாரும். அங்கத்தவர்கள் அனைவரும் எனக்கும் நண்பர்களாகிவிட்டனர். இலங்கையில் ஒரு குறுகிய வட்டத்தில் இருந்து வந்த என்னுடன் பல்துறை நண்பர்களை கனடாவில் இணைத்த நண்பன் கனெக்ஸ். என்னை எழுதத்தூண்டி எதையாவது எழுதவைத்தவரும், பேசத்தூண்டி மேடையில் எதையாவது பேசவைத்தவரும் அவரே.

மூன்று வருடங்கள் மாணவனாக மாஸ்ரரிடம் படித்தது ஒரு பாடம். 54 வருடங்கள் நண்பனாகக் கனெக்ஸிடம் கற்று அறிந்தவை பல பாடங்கள்.

லண்டனில் இருந்து தொலைபேசியில் ஒரு நண்பர் "Sir தனியாக இருக்கிறீர்களே அவசர தேவை என்றால் என்ன செய்வீர்கள்" எனக் கேட்டிருந்தார். கனெக்ஸ் சொன்ன பதில்: "காலையும் மாலையும் கதிர் என்னுடன் தொடர்பு கொள்கிறார், தேவை என்று அழைத்தால் உடனே வந்து விடுவார்". இக்கூற்று நட்பை மட்டுமன்றி என்மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையையும் உணர்த்தியது. நட்பின் நிமித்தம் கனெக்ஸை சிலவேளைகளில் குறைகண்டு எடுத்துக் கூறியிருப்பேன். ஒரு முறை அவரைக்கண்டித்தும் விட்டேன். அமைதியாக இருந்து விட்டு, மறுநாள் "நீர் என்னைக் கண்டித்த போது துன்பமாக இருந்தது. பின்னர் யோசித்துப் பார்த்தபோது உமது சாடலில் உள்ள உண்மையும் அக்கறையும் புலப்பட்டது" எனக் கூறி,

'நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு'

என்ற குறளின் பொருளையும் விளக்கினார்.

'சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடிந்த வரை முயல வேண்டும்,' 'அழைக்கப்பட்ட நேரத்திற்கு வைபவங்களுக்கு சமுகமளிக்க வேண்டும்' - இவ்விரண்டும் அவரின் தாரக மந்திரம். கனெக்ஸ் உடன் இணைந்து செல்லும் சந்தர்ப்பங்கள் பல எனக்கு அமைந்த காரணத்தால் நானும் இவற்றைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. அளவுக்கு மீறிய தூக்கம், சோம்பல், மறதி, காலம் தாழ்த்துதல் இவை நான்கும் கனெக்ஸ்க்குப் பிடிக்காதவை. எங்கள் நட்புக்கு இவை உதவின. ரொறன்ரோ என்றுமே கண்டிராத வகையில் கனெக்ஸின் நூல்களின் வெளியீடு இரு தடவை இடம் பெற்றது. நிகழ்வு ஒழுங்காளராக இரண்டிற்கும் என்னைப் பணித்தார். திட்டமிடல், நேரடி அழைப்பு, நினைவூட்டும் அழைப்பு, விழாவிற்கு வந்தவர்களை முக மலர்ச்சியுடன் கவனித்தல், மறுநாள் ஒவ்வொருவரையும் அழைத்து நன்றி கூறல் எல்லாவற்றையும் அவர்தான் செய்தார். ஆனால், விழாவின் வெற்றிக்கு கதிர் தான் காரணம் என்று மேடையில் தனது உரையில் கூறினார். நடந்ததற்கு நன்றிகூறல், பிடித்ததைப் பாராட்டுதல், இரசித்ததைப் பகிர்தல் ஆகிய நற்பண்புகளை சிலரிடம் தான் காணலாம். அவர்களில் முதல் இடம் வகிப்பவர் கனெக்ஸ்.

நூல் வெளியீட்டு விழாவிற்கு இலங்கை சென்ற அவர், எனது தாயாரைக் கொழும்பில் சந்தித்து உரையாடினார். எனது தந்தை, தாயார், சகோதரங்கள், துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என நான்கு தலைமுறைகளுடனும் வயது வேறுபாடின்றி நட்புப் பேணி வந்தார்.

கர்நாடக இசை, மெல்லிசை இரண்டையும் கனெக்ஸ் நுட்பமாக இரசிப்பார். அவர் விரும்பிக்கேட்கும் பாடல்கள் எனக்கும் பிடிக்கும். இருவரும் இணைந்து இரசித்தவற்றுள் சில:

ராஜாஜியின் 'குறை ஒன்றும் இல்லை ...' M.S சுப்புலட்சுமி பாடியது; M.M. தண்டபாணிதேசிகரின் 'தாமரை பூத்த தடாகமடி ...'; பாரதிதாசனின் 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ...' பாடலுக்கு தண்டபாணிதேசிகர் மெட்டு அமைத்தவிதம்; பாரதியாரின் 'தலைவாரி பூச்சூடி உன்னை ...' P. பானுமதி பாடியது. குறை ஒன்றும் இல்லை, துன்பம் நேர்கையில் எவர் பாடினாலும் கேட்டு மகிழ்வார்.

'கதிர் உலா' என்ற பாராட்டுப் பனுவலில் 'இருவரும் ஒன்றாகவே பிரயாணிக்கிறோம்' என்ற தலைப்பிலும் 'காதோடு காதாக' என்ற எனது நூலின் ஆசிரியர் அறிமுகத்தில் 'மாணவனே தோழனுமாகி' என்ற தலைப்பிலும் 'நண்பர்' என்ற எனது மணிவிழா மலரில் 'முதன்மை மாணவனா?' என்ற தலைப்பிலும் கனெக்ஸ் என்னை வியந்து பாராட்டி எழுதி இருந்தார்.

எனது பிறந்த தினத்தை ஒட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடந்த வைபவத்திற்கு நட்பின் நிமித்தம் கனெக்ஸ் 'Walker' உடன் வருகை தந்து உரையாற்றினார். பின்னர் நவம்பர் மாதம் மண்டபத்தில் நடந்த விழாவில் நகைச்சுவை ததும்ப உரையாற்றிக் கௌரவித்தார். இரண்டு இடத்திலும் "உங்களுக்காகவும் முக்கியமாக எனக்காகவும் கதிர் நீடு வாழவேண்டும்" என வாழ்த்தினார்.

நான் இரவு வேலை செய்யும் காலத்தில் இரவு 11.45 க்கும் பகல் வேலை செய்ய தொடங்கிய காலம் முதல் காலை 8.45 மணிக்கும் கனெக்ஸை தொலைபேசியில் தொடர்புகொள்வேன். 15 நிமிடங்களுக்கு மேல் நான் தாமதித்தால் அவர் அழைப்பார். கனடாவிற்கு வெளியே சென்ற வேளைகளிலும் இது தொடர்ந்தது. 27 ஆண்டுகள் இப்படிக் களித்துவிட்டேன். டிசம்பரில் இருந்து தொலைபேசியில் காலை தொடர்புகொள்வதோடு மாலையில் அவரின் வீடு சென்று சந்தித்தும் வந்தேன். 24ம் திகதி காலை அழைத்தேன். அவர் பதிலளிக்காத முதல் அழைப்பு, எனது இறுதி அழைப்பாயிற்று.

'முதன்மை மாணவனா?' என்ற கட்டுரையின் இறுதியில் நண்பன் கனெக்ஸ் எழுதிய வரிகள் ...

'... எங்கள் நட்பு தொடர்கிறது
தொடரும்!
அடுத்த பிறவியிலும் கூட ...'



kathir.thuraisingam@thaiveedu.com

# ஈடுசெய்ய முடியாத வெற்றிடம்

- பி.ஜெ. டிலிப்குமார் -

ஏறக்குறைய இருபது வருடங்களாக நான் அதிபரை அறிவேன். தொடக்கத்தில் ஒரு நாடக நடிகனாக அவர் என்னை அறிந்திருந்தார். சிறந்த கல்விமானாக நான் அவரைத் தெரிந்து கொண்டிருந்தேன். எங்கேனும் சந்திக்க நேர்ந்தால் பெரும்பாலும் சிறிய புன்னகை அல்லது ஓரிரு சொற்களில் முகமன்.

தாய்வீடு தொடங்கும்வரை எம்முறவு இவ்வாறுதானிருந்தது.

தாய்வீடு இதழின் இயல்புகளை வரையறுத்து விட்டு எழுத்தாளர்களை உள்வாங்குவது பற்றிச் சிந்திக்கும் பொழுது ஒளி விட்ட சில எழுத்தாளர்களில் அதிபரும் ஒருவராக இருந்தார்.

ஓர் இதழின் ஆசிரியனாக முதல்முறையாக அவருடன் தொடர்பு கொண்டேன்.

எள்ளல் கலந்த அவரது எளிமையான உரையாடலில் நான் கட்டுண்டு போனேன். 'தாய்வீடு' இதழ் தனக்கென வகுத்துக் கொண்டிருந்த வரையறைகளும் அதிபருக்குப் பிடித்துப் போனது. எவ்வித 'எழுத்தாளத்தன பந்தா'க்களும் இல்லாமல் எழுத ஒப்புக் கொண்டார்.

தாய்வீடு இதழுக்கென அவர் தனித்தனியான பல தலைப்புக்களில் எழுத ஆரம்பித்தார். எழுத ஆரம்பித்துச் சில மாதங்களின் பின் எழுதிய தொடர்தான் 'மரம் மாந்தர் மிருகம்'. அறிவியலும் வாழ்வியற் சிக்கல்களும் கலந்த படைப்பு இது. வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தது. எள்ளல் இழையோடும் எளிய எழுத்து நடையை அதிபருக்கு அடையாளமாக்கிவிட்டதும் இத்தொடர்தான்.

அதிபருக்கும் இத் தொடர் நன்றாகப் பிடித்திருந்தது. வாசகர் வெளிப்படுத்திய மதிப்பீடுகள் அதிபரை உற்சாகப்படுத்தின. சில ஆண்டுகளுக்குப்பின் தொடரை நிறைவு செய்தார். அத்தனை கட்டுரைகளையும் அழகிய நூலாக்கினார்.

'மரம் மாந்தர் மிருகம்' என்ற நூல் பல நாடுகளில் வெளியிடப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. ரொறன்ரோவிலும் சிறப்புமிக்க விழாவாக இவ்வெளியீடு நடைபெற்றது.

இத்தொடர் நிறைவுற்றாலும் நான் அவரை விடுவதாக இல்லை. துரத்தியபடியே இருந்தேன்.

அதிபர் அடிக்கடி மருத்துவமனைக்குச் செல்லத் தொடங்கியிருந்த காலம் இது. கனடா மருத்துவ முறைகளும் அதிபரின் உயிரியல் அறிவும் முட்டி மோதியதில் பல புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொண்டிருந்தார் அதிபர்.

பிறகென்ன அதையே எழுதலாமே...

யமதர்மராசாவின் தோரண வாசல் மருத்துவமனை என்பதால் யமதர்மராசாவுக்கு எழுதும் கடிதமாகவே அவர் அனுபவத் தொடர் வெளிப்பட்டது.

உயிரியல் ஆசிரியருக்கே உரிய முறையில் தன் நோய்களோடு தொடர்புபடுத்தி மனித உடற் கூற்றியலை அழகுற எழுதினார். மருத்துவர்களிடத்தும் தாதியரிடத்தும் தன் உயிரியல் அறிவைக் காட்ட முயன்று பெருமையுற்றதையும் அவ்வப்போது மூக்குடைபட்டதையும் எள்ளலோடு அவர் எழுதிய நடை வாசித்தோரை வசியப்படுத்தியது.

நோயுற்று உடல் வாடிய நிலையிலும் முடிவறியாது மருத்துவம் தொடர்ந்த பொழுதிலும் எழுத்தில் எள்ளல் நடை சிறிதேனும் குறையவில்லை. நோய்களுக்கு அஞ்சா உறுதியும், தளர்வறியா உணர்வோட்டமும் எழுத்தின் இயல்பை சிறிதும் குறைக்கவில்லை.

ஓரிரு கட்டுரைகள் தவறியிருக்கின்றன. சில தாமதமாகியிருக்கின்றன. ஆனால் எக்கட்டுரையும் சோர்வையோ துன்பத்தையோ சுமந்து வரவில்லை. தன் உடல் உபாதைகளைச் சுமக்க எச்சொல்லையும் அதிபர் அனுமதித்ததில்லை.

சில பொழுதுகளில் இவர் மருத்துவமனைகளில் தங்கிவிடுகின்ற பொழுது சரி இம்மாதம் கட்டுரை வராது என்று எண்ணிக் கொண்டாலும் மனம் கேட்காது. தொலைபேசியில் அழைத்தோ அல்லது நேரிற் சென்றோ நலம் விசாரிப்பேன். தானாகவே



"என்ன கட்டுரைதானே அனுப்பி விடுகிறன்" என்பார்.

சிலவேளைகளில் அதிபரின் கட்டுரை தாமதப்பட்டுவிடும். அதற்கு உடல்நலக்குறைவு காரணமாக இருந்தால் என் மனம் நிறைவாக அதை ஏற்றுக்கொண்டிருக்கும்.

தொலைபேசியில் அழைத்து "சேர் கட்டுரை இன்னும் ..." நான் முடிக்கும் முன்பாகவே "டிலிப் கிரிக்கெட் மட்ச் நல்லாப் போய்க் கொண்டிருக்கு முடிஞ்சபிறகு எழுதி அனுப்புறன்". ஒரு தடவையல்ல, அடிக்கடி எனக்கும் அதிபருக்கும் இடையில் தீ மூட்ட முயன்றது இந்தக் கிரிக்கெட்தான்.

இந்தக் கிரிக்கெட் மீது நான் தீராப்பகை கொள்வதற்கு அதிபரும் கூடவே வேறு ஓரிருவரும் காரணமாக இருந்தனர்.

அதிபரின் உடல்நிலையை நான் ஓரளவு அறிந்துகொண்டிருந்தேன். அதிபரோடு பேச முடியவில்லை என்றாலும் கதிர் துரைசிங்கம் அவ்வப்போது சரியான தகவல்களைத் தருவார். கடந்த மார்கழி மாதமும் நான் அதிபரோடு பேசியிருந்தேன். கட்டுரை பற்றிப் பேசவில்லை. ஆனாலும் தெம்பாக இருப்பதாகக் கூறி கட்டுரையை வழமை போல் தானே தட்டச்சு செய்து தாய்வீட்டின் எழுத்துகளுக்கான கால எல்லையான 15ம் திகதிக்கு முன்பே அனுப்பி விட்டார்.

அக்கட்டுரையின் தலைப்புத்தான் 'ஒவ்வொருத்தராகக் கைகழுவி விடுகிறார்களா?' இந்தக் கட்டுரையோடு இவர் எம் எல்லோரையும் கைகழுவி விடப்போகிறார் என்பதை அவ்வேளை எவரும் அறிந்திருக்கவில்லை.

எனக்கும் அதிபருக்குமான தொடர்பு வெறுமனே கட்டுரைகளோடு மட்டும் நின்று விடவில்லை. வேறு பரப்புகளுக்குள்ளாகவும் நீண்டது.

பத்திரிகைப் பணி சவால்கள் நிறைந்தது. அதில் எனக்குப் பெருஞ் சவாலாக இருந்தது ஆங்கிலச் சொற்களுக்கும் வடமொழிச் சொற்களுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல் தேடுவதுதான்.

என் தேடுலுக்கு விடை தர முயன்றோரில் சிலர் புலமையைக் காட்ட முயன்றார்களே தவிர பொருத்தமான சொற்களைத் தரமுடியாதிருந்தனர். அதிபர் பெரும்பாலும் பொருத்தமான சொல் தருவதில் பெரிதும் துணை நின்றார்.

பத்திரிகைப் பணி சூடு பிடித்திருக்கும் மாதத்தின் கடைசி வாரத்தில் சொல் சுளிக்காது (தொலைபேசியில் முகம் தெரியாதல்லவா) எப்போது அழைத்தாலும் பதில் தருவார்.

மாதத்தின் முதல் வாரத்தில் பத்திரிகை வெளிவந்துவிடும். தவறாது அவர் வீட்டு வாசலில் இதழை வைத்துவிடுவேன். ஆறுதலாக அத்தனை எழுத்துகளையும் வாசிப்பார்.

'எழுதப்படும் கட்டுரையனைத்துக்கும் எழுத்தாளரே பொறுப்பு' என்ற தப்பித்தல் தாரக மந்திரத்தையும் மீறி என்னை அழைப்பார். அவரால் கண்டறியப்பட்ட பிழைகளைக் குறித்துக் கொண்டு ஏற்ற இறக்கங்களுடன் என்னை ஒரு வாங்கு வாங்குவார். ஒரே நாளில் முழுப் பத்திரிகையையும் அவர் வாசிப்பாராயின் இப் 'பிழை பிடிப்பு' ஒரு நாளில் முடிந்து விட வாய்ப்பிருக்கும். இவர் வாசிப்பு இரண்டு வாரங்களுக்கு மேல் தொடர்வதால் பிழைகளைப் பொறுத்து எனக்கான அழைப்பும் தொடரவே செய்தது.

அதுபோலவே, பாராட்டவேண்டியவற்றையும் உடனுக்குடன் செய்துகொள்வார். தாய்வீட்டில் வரும் ஓவியங்கள் ஒவ்வொன்றையும் ரசித்துப் பார்ப்பார். விமர்சிப்பார்.

இவர் அழைக்கும் போதெல்லாம் ஆசிரியருக்குப் பயந்த மாணவன் போலத்தான் தொலைபேசியைத் தொடுவேன்.

அன்பராக இருப்பவர் பிழை காணும் போதெல்லாம் அதிபராக மாறிவிடுவார்.

இத்தகைய அழைப்புகளினூடாக என்னையும் தாய்வீட்டையும் குறிப்பிடத்தக்களவு செம்மைப்படுத்தியவர் அதிபர்.

அவரிடம் நான் கற்றுக்கொண்ட துறை வேறொன்றும் இருந்தது.

தோட்டக்கலை பற்றிய அதிபரின் ஈடுபாட்டை அவரை அறிந்தோர் அனைவரும் அறிவர். தோட்டக்கலையில் எனக்கும் பெருவிருப்பு இருந்தது. அவரது தோட்டத்தின் பேரழகு கனடாவில் நான் எந்த வீட்டிலும் காணாதது. பின்ளைகளைப் போலவே தன் தோட்டத்துப் பூச்செடிகளையும் அவர் பராமரிப்பார். அதிபரின் கனடாச் சூழலில் தோட்டம் வைப்பது பற்றி நான் அவரிடந்தான் கற்றுக் கொண்டேன். பல பூச்செடிகளை எனக்கு அறிமுகப்படுத்தினார். பாராமரிக்கும் வழிகளைக் விளக்கமாகக் கூறினார்.

என் வீட்டுத் தோட்டம் அழகு பெற அதிபரே காரணமாவார்.

அதிபருடைய வேண்டுகோள் ஒன்றை அவர் காலத்தில் நிறைவேற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் இப்போது என்னைக் குடைந்து கொண்டிருக்கின்றது.

அவ்வப்போது பலருக்கும் பலகையில் படங்கள் செதுக்கிக் கொடுப்பது என் வழக்கம். தனக்கும் விருப்பம் இருப்பதை என்னிடம் தெரிவித்திருந்தார். அதற்கென்ன ஆறுதலாகச் செய்து கொடுக்கலாம் என நானும், அவசரம் எதுவும் இல்லை என அதிபரும் இருந்துவிட்டோம். ஆனால் காலனின் அவசரத்தை நாம் இருவருமே தெரிந்திருக்கவில்லை.

அவரது அந்தியேட்டி நிகழ்விலேதான் இப் படத்தை என்னால் வைக்க முடிந்தது.

அதிபர் தொடர்ந்து எழுதுவதற்காக, ஒரு புதிய தலைப்பு பற்றி என்னோடு பேசியிருந்தார். பல பாரம்பரிய தமிழர் கலைகளை ஒடுக்கப்பட்டோர் எனக் கருதப்பட்டோரே பெரிதும் போற்றி வந்துள்ளனர். அவர்களால் தொடர்ந்து பேணப்பட்ட கலைகள் குறித்து எழுதப்போகின்றேன், இது சர்ச்சைகளைக் கூடத் தோற்றுவிக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். அதற்கான தகவல்களைத் திரட்டிக்கொண்டுமிருந்தார். இக்கட்டுரை தொடராக வெளிவந்திருப்பின் அரிய வரலாற்றுச் செய்திகள் நமக்குக் கிடைத்திருக்கும்.

கனடிய மண்ணில் அதிபர் அவர்கள் வாழ்ந்த வாழ்வு பெருவாழ்வு. அவ்வாழ்வில் அவரளவில் என்னோடான அவரது உறவு மிகச் சிறிதே. ஆனால், என்னளவில் அது மிகப் பெரிது. என் தேவைகளில் அவரது இல்லாமை ஏற்படுத்தியிருக்கும் வெற்றிடத்தை நான் உணர்கின்றேன்.

இந்த வெற்றிடம் வேறு எவராலும் ஈடுசெய்ய முடியாதது.

தாய்வீடு இதழின் வளர்ச்சியில் அதிபர் ஏற்படுத்திய தாக்கம் வலியது, உறுதியானது. எக்காலத்திலும் நிலைத்து நிற்க வல்லது.

*தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையு ளெல்லாந் தலை.*

editor@thaiveedu.com

■ ■ ■